கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
20-1-1974
40 காசு





வளரும் குழந்தைகளுக்கு
வாய்ப்பான துணை இன்க்ரிமின்!
Incremin* syrup
WITH IRON
TONIC APPETITE STIMULANT
வளரும் பருவம்!
துள்ளித் திரியும் கன்றுப் பருவம்...ததும்பி வழியும் சக்தி...பொங்கிப் பெருகும் பூரிப்பான ஆரோக்கியம்!
இதுதான் வளரும் பருவம். உடலும் உள்ளமும் ஓங்கி வளரும் இச் சமயத்தில் உங்கள் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் வழங்குங்கள். பலனளிக்கும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, அதி முக்கிய அமினோ அமிலம். வளரும் பருவத்தில் அத்தியாவசியமான இவை அனைத்தும் அடங்கியது இன்க்ரிமின் டானிக்.
இன்க்ரிமின்*
இன்க்ரிமின் டானிக் வளரும் பருவத்தினருக்கு ஒரு வரப்பிரசாதம்
டாக்டர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர் Lederle சயனமைட் இந்தியா லிமிடெட்டின் ஒரு பிரிவு
*அமெரிக்கன் சயனமைட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்
SISTAS-INC-3068A TAM



கோகுலம்

மலர் 2 : இதழ் 21

ஜனவரி 20, 1974

பிரமாதீச, தை 7




அட்டையில் :

காயமே இது பொய்யடா !
காற்றைச் சுற்றி என்னடா ?
காற்றடைத்தப் பையடா !

வண்ணப்படம் : ஆர். ஹரிகோபால்

உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

— பாரதியார்



சந்தா விவரம் :

உள் நாடு :

ஒரு வருடம் ... ரூ. 10–00

ஆறு மாதம் ... ரூ. 5–00

இலங்கை :

ஆண்டுச் சந்தா : ரூ. 15–00
(இலங்கை நாணயப்படி)


இதர நாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25–00

★

மானேஜர், கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை - 600031

பிள்ளையார் பெருமை



அங்காரகன் வழிபட்டது

விநாயக பக்தராகிய பாரத்துவாச முனிவர் நர்மதை நதிக் கரையில் தவஞ் செய்து கொண் டிருந்தார். ஒரு நாள் நர்மதையில் நீராடச் சென்றார். அங்கு வந்த ஒரு தேவ மாதைக் கண்டு உள்ளம் விரும்பிச் சிறிது கலங்கினார் முனிவர். மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு தவ நிலையில் உறுதியுடன் இருந்தார். தவத்தில் முதிர்ந்த முனிவரின் மனத்தில் தேவமாதை நினைத்த மாத்திரத்தில் அந்த எண்ணமே ஒரு குழந்தை உருக் கொண்டு நிலத்தில் தவழ்ந்தது. அதனை நிலமகள் கண்டு எடுத்து வளர்த்தாள். அக்குழந்தை செவ்வானம் போல் சிவந்து அழல் போல் ஒளி பெற்றிருந்த படியால் அங்காரகன் என்றும், பூமகளால் வளர்க்கப்பட்டபடியால் பூமி குமாரன் என்றும் பெயர் பெற்றான்.

அங்காரகன் ஒரு நாள் தன் தாயாகிய மகளை நோக்கி ''அம்மா! எனக்கு அப்பா யார்?'' என்று கேட்டான்.

நிலமகள், ''மகனே! உன் தந்
பாரத்துவாசர்'' என்று கூறி, அவ
அழைத்துக் கொண்டு போய் முனி
ரிடம் சேர்த்து, ''அடிகாள்! இவ
தங்கள் தவத்தால் பிறந்தவன். இவ
வளர்ப்பது தங்கள் கடன்'' என்று கூறி
சென்றாள்.

பாரத்துவாசர், தமது மகனுகி
அங்காரகனுக்குச் சகல கலைகளையும் க

திருமுருக கிருபானந்த வாரியார்



பித்தார். கல்வியின் பயன் கடவுள் பற்று; ஆதலால் கணேச மந்திரத்தை உபதேசித்தார். ''மகனே! தெய்வங்களுக்குள் முதல் தெய்வம் விநாயக மூர்த்தியாகும். அவர் கருணாமூர்த்தி. எல்லாச் சித்திகளும் முத்தியும் அவருடைய தண்ணருளால் கிடைக்கும். அவரை நோக்கித் தவஞ் செய்'' என்றார்.

அங்காரகன் ஆயிரம் ஆண்டுகள் தந்தி முகக் கடவுளை வேண்டி அருந் தவஞ் செய்தான். ஆனைமுகப் பெருமான் அவன் முன் தோன்றி யருளினார். அங்காரகன் அவரை அன்புடன் தொழுதான். ஆனந்தக் கூத்தாடினான்.


விநாயகர், ''அங்காரகனே! நாம் உன் தவத்துக்கு மகிழ்ச்சி யடைந்தோம். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்'' என்றார்.

அங்காரகன் ''அண்ணலே! தேவரீருடைய திருவடிகளில் இடையறாத அன்பு வேண்டும். தேவர்களுடன் கூடி அமுதுண்ணத் தக்க உறவும், கோள்களில் ஒருவனாக விளங்கும் பதமும் வேண்டும். தேவரீருடைய காட்சி கிடைத்த இந்நாள் சதுர்த்தி யாதலால் இந்தச் சதுர்த்தி நாளில், எனது கிழமையாகிய செவ்வாய் நாள் சேர்ந்து வருகின்றபோது தேவரீரை வழிபடுவோரது சங்கடங்களை ஒழித்தருள வேண்டும்'' என்ற வரங்களைக் கேட்டான். விநாயகர் அவன் வேண்டிய வரங்களை வழங்கி யருளினார்.

அங்காரகன் அவந்திமா நகரத்துக்கு மேற்புறத்தில் ஒரு கோயிலை அமைத்து விநாயகரது திருவுருவத்தை நிறுவி வழிபட்டுக் கொண்டிருந்தான். இந்த இடம் **காமதம்** என்று ஒரு பெயரும் பெற்றது. விநாயகருடைய திருவருளால் விண்ணிலிருந்து ஒரு தெய்வ விமானம் வந்தது. அங்காரகன் விமானத்தில் ஏறி விண்ணுலகம் சேர்ந்தான். அமரர்களுடன் கூடி அமுத பானம் செய்தான்.. நவக்கிரக நாயகர்களுள் ஒருவனாய்ப் பதம் பெற்றான்.

ஆதலால் செவ்வாயன்று வருகின்ற சதுர்த்தி மற்றைய சதுர்த்திகளை விடச் சாலச் சிறந்தது. செவ்வாய்க் கிழமை வரும் சதுர்த்தியில் வழிபட்டோர் விநாயகருடைய திருக் கருணைக்குப் பாத்திரம் ஆவார்கள். அது எல்லாச் சங்கடங்களையும் போக்குவதால் சங்கடஹர சதுர்த்தி யென்று பேர் பெற்றது. அதிலும் மாசி மாதம் செவ்வாய்க் கிழமை அமர பட்சத்தில் வரும் சதுர்த்தி மிகவும் சிறந்தது. அன்று வழிபடுவோருக்குச் சிந்தித்த அனைத்தும் வழங்குவதால் சிந்தாமணி விநாயகர் என்று பேர் பெற்றார்.

சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகரை உள்ளன்புடன் வழிபட்டோர் சங்கடங்கள் தீர்ந்து இன்பநலன்களைப் பெறுவார்கள்.





க்ரம் மசாலா பாப்கார்ன்!

— வாண்டுமாமா —

ரங்கன் போட்டுக் கொண்டு ஓடினான். அவன் கையில் முழுசாக மூன்று பத்து பைசாக்கள் இருந்தன. ஊரிலிருந்து வந்திருந்த அவன் மாமா அவனுக்குப் பரிசாகக் கொடுத்த பைசாக்கள் அவை. நேரே ராவுத்தர் கடையை நோக்கி ஓடினான் ரங்கன். அவனுக்குப் பிடித்த மசாலா பாப்கார்ன் அங்குதானே கிடைக்கும் ?

கடையில் கூட்டமில்லை. ராவுத்தர் மட்டும் கல்லாப் பெட்டியின் அடியில் காசுகளை எண்ணிக் கொண்டிருந்தார். ரங்கனைக் கண்டதும், ''வா, தம்பி! என்ன வேணும்? ஏன் இப்படி ஓடி வந்தே? உனக்கு மூச்சு இறைக்குதே!''— என்றார்.

'' கரம் மசாலா பாப்கார்ன் இருக்குதா ?'' என்று கேட்டான் ரங்கன்.

'' நிறைய இருக்குது தம்பி. காலையிலே வந்திருந்தா கிடைச்சிருக்காது. இப்பத்தான் புது 'ஸ்டாக்' வந்திருக்கு? எத்தனை பாக்கெட்டுகள் வேணும் ?'' என்றார் ராவுத்தர்.

''ஒண்ணு போதும். அதுக்குத்தான் காசு இருக்கு என்கிட்டே'' என்ற ரங்கன் முப்பது பைசாவைக் கொடுத்தான். ராவுத்தர் ஒரு பாலித்தீன் பையிலிருந்த பாப்கார்னையும் மீதி ஐந்து பைசாவையும் ரங்கனிடம் கொடுத்துக் கொண்டே, ''தம்பி! உன் சிநேகிதங்க கிட்டேயெல்லாம் சொல்லு. ராவுத்தர் கடையிலே நல்ல பாப்கார்ன் நிறைய வந்திருக்குன்னு....'' என்றார்.

''ஓ! சொல்றேனே!'' என்று சொல்லிக்கொண்டே ஓடினான் ரங்கன்.

''பாவிப் பயல் இருபது பாக்கெட்டுக்கு ஆர்டர் கொடுத்திருக்க ஐம்பது பாக்கெட்டைத் தலையிலே கட்டிட்டுப் போயிட்டான். எப்படித்தான் இத்தனையும் விக்கப் போவுதோ!'' என்று அலுத்துக் கொண்டார் ராவுத்தர்.

வீட்டுக்குத் திரும்பும்போது தேர் முட்டிப் பக்கமாகப் போனான் ரங்கன். அங்கு வழியில் மழை நீர் தேங்கிய ஒரு பெரிய குட்டை இருக்கும். அதில் எப்போதும் ஊரில் உள்ள எருமைகளும் வாத்துக்களும் உல்லாசமாக விளையாடிக் கொண்டிருக்கும். யாரும் அவைகளை லட்சியம் செய்ய மாட்டார்கள். அவைகளும் யாரையும் லட்சியம் செய்யாமல் குட்டை நீரில் குஷியாக நீந்திக் கொண்டிருக்கும். இன்று என்ன அதிசயம்! குட்டையைச் சுற்றி ஒரே கூட்டம்! ரங்கன் எம்பிப் பார்த்தான். ஏதும் தெரியவில்லை. அவன் குள்ளம். ஆகவே கூட்டத்துக்குள் புகுந்து தலையை நுழைத்துப் பார்த்தான். கூட்டத்துக்கான காரணத்தை அறிய ஆவல் அவனுக்கு.

அங்கே....? என்ன ஆச்சரியம்! எருமைகளோ வாத்துக்களோ இல்லை. நட்ட நடுக் குட்டையில் அது என்ன மிருகம்?... பெரிய தலை, பூத உடல்... ஓ! நீர் யானையல்லவா இது? இது எப்படி வந்தது இங்கே? ரங்கனின் குழப்பம் அங்கு கூடியிருந்தவர்களின் பேச்சைக் கேட்டபோது தெளிந்தது.

''ஊரிலே சர்க்கஸ் வந்திருக்கில்லையா? அதிலே இருக்கிறதாம் இந்த மிருகம். அவங்க கவனக் குறைவா இருந்தபோது இது வெளியே கிளம்பி வந்துடுச்சி...''

''ஆமா! விறகு பேட்டைக்கிட்டே டேராப் போட்டிருக்குதே புதுச் சர்க்கஸ் கம்பெனி. இன்னிலேயிருந்துதான் 'ஷோ' ஆரம்பம். இது நீர் யானை. இதுக்குத் தண்ணீன்னா ரொம்பக் குஷி. அடேயப்பா, எத்தனை பெரிய தலை இதுக்கு!''

ரங்கனுக்கு இப்போது எல்லாம் விளங்கி விட்டது. புதிதாக வந்துள்ள சர்க்கஸ் கம்பெனி இந்த நீர் யானைப் படத்தைப் போட்டே போஸ்டரெல்லாம் ஒட்டியிருந்தாங்க. பாவம் வாத்துக்கள் 'க்வாக் க்வாக்' என்று கூச்சலிட்டபடி எதிர்க் கரையில் பீதியடைந்து போய்க் கூட்டமாய் நின்றிருந்தன. தீயணைப்புப் படைக்கு ஆள் அனுப்பியிருக்கிறார்களாம், நீர் யானையை ஏரியிலிருந்து கிளப்பிக் கொண்டு போக. சர்க்கஸ் கம்பெனி நிர்வாகிகள் கவலையோடு குட்டைக் கரையில் நின்று கொண்டிருந்தார்கள்.

'கிணிங் கிணிங்' என்று விடாமல் தொடர்ந்து கேட்ட மணியோசை தீயணைப்பு வண்டி வருவதை அறிவித்தது. ''வழி விடுங்கள், வழி விடுங்கள்'' என்ற குரல் பரபரப்பை ஏற்படுத்தியது கூட்டத்தில். ஃபயர் என்ஜின் வண்டி ஆட்களுடன் குட்டைக் கரைக்கு வந்து நின்றது. நெருப்பணைக்கும்போது, நீரைப் பீச்சியடிக்க உதவும் குழாய் மூலம் ஹிப்போ மீது நீரை வேகமாக அடித்தால் அது கரையேறி விடும் என்று முடிவு செய்தார்கள். அதன்படி மடித்துச் சுருட்டி வைக்கப்பட்டிருந்த தேர் வடம் போன்ற குழாயைப் பிரித்துப் பரபரப்புடன் செயல்பட்டபோது நீர் யானை குப்பென்று குட்டை நீருக்குள் மூங்கி மூழ்கி விட்டது. அதன் சிறிய காதுகளும் பிதுங்கிய கண்களும் மட்டுமே நீர் மட்டத்துக்கு மேல் தெரிந்தன. இந்த நிலையில் அதன் மீது எப்படித் தண்ணீரைப் பீச்சியடிப்பது? குட்டையிலிருந்து அதைத் தங்களால் வெளியேற்ற முடியாதென்று தீயணைப்புப் படையினர் தண்ணீர்க் குழாய்களைச் சுருட்டிக் கொண்டு 'டிங் டிங் டிங்' என்று மணியடித்தபடியே திரும்பிப் போனார்கள்.

இதற்குள் சர்க்கஸ் நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தபடி ஒரு லாரி வந்தது. அதில் ஒரு பளு தூக்கி (கிரேன்) பொருத்தப்பட்டிருந்தது. குட்டையின் கரை அருகில் பின்னோக்கி அந்தக் கிரேனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அதன் யந்திரம் 'கர்ர்', 'பூர்ர்' என்று சத்தமிட்டது. கிரேன் துதிக்கை போல் குட்டை நீரில் ஹிப்போவின் மீதாகத் தழைந்தது. அதை அப்படியே தூக்கிக் கரையில் வைத்து விடலாம் என்பது அவர்கள் முடிவு. ஆனால் ஏனோ வெகு நேரம் முயன்றும் முடியவில்லை. ஹிப்போவை அதன் நிலையிலிருந்து அசைக்கவே முடியவில்லை. அதைத் தூக்கும் அளவுக்கு அந்தக் கிரேனுக்குச் சக்தி இல்லையோ, அல்லது அதைத் தூக்க வசதியான தோது கிடைக்கவில்லையோ—எப்படியோ



கிரேனும் தோல்வி கண்டு தொங்கிய முகத்துடன் குட்டைக் கரையை விட்டு நகர்ந்தது.

குட்டைக் கரையைச் சூழ்ந்திருந்த மக்கள், சர்க்கஸ் நிர்வாகிகள், வாத்துக்கள் எல்லோரும் ஹிப்போவைக் குட்டை நீருக்குள்ளிருந்து வெளியேற்றுவது எப்படி என்று தெரியாமல் குழம்பிப்போய் நின்று கொண்டிருந்தார்கள். இதில் வாத்துக்கள்தான் பாவம், தங்கள் உரிமை பறி போய் விட்டதினாலோ என்னவோ அடிக்கடி இறக்கைகளை விரித்துத் தாவித் தாவி 'க்வாக்' க்வாக்' என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தன.

ரங்கன் இப்போது கூட்டத்தின் முன்னால் குட்டைக் கரையின் ஓரமாக நின்று கொண்டிருந்தான். பாப்கார்ன் சாப்பிடவேண்டும் என்ற நினைவே இல்லாமல் இத்தனையையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். கிரேனும் திரும்பிப் போனதும் சட்டென்று அவன் நினைவு பாப்கார்ன் மீது சென்றது. அதே சமயம் ஹிப்போ தனது பிரும்மாண்டமான வாயைத் திறந்து கொட்டாவி விட்டது.

ரங்கனுக்கு என்ன தோன்றியதோ விளையாட்டுக் குணம் தலைதூக்கவே தன் கையிலிருந்த பாப் கார்னில் ஒரு பிடி எடுத்துக் குட்டை நீரில் ஹிப்போவின் பக்கம் விசினான். வெள்ளை வெளேர் என்ற சோளப் பொரி கறுப்பு நீரில் மிதந்தது. அது ஹிப்போவின் கவனத்தைக் கவர்ந்தது. மிதக்கும் சோளப் பொரிகளைச் சாப்பிடத் தன் நிலையிலிருந்து நகர்ந்து வந்ததுஹிப்போ. எல்லோருடைய விழிகளும் வியப்பினால் விரிந்தன. ரங்கன் இன்னொரு கை அள்ளி வீசினான். 'க்ளப்' 'சலப்'—ஹிப்போ சோளப் பொரிகளை விழுங்கியபடியே கரையோரமாக வந்தது. ரங்கன் ஒரு பிடி அள்ளிக் கரை மீது புல் தரையில் வைத்தான். கரம் மசாலா பாப்கார்னின் ருசி கண்ட நீர் யானை நீரிலிருந்து வெளியேறிப் புல் தரைக்கு வந்தது. சர்க்கஸ் மானேஜருக்கு வியப்பான வியப்பு. ''பலே, பலே! பையா இவ்வளவு சுலபமாக, எங்கள் ஹிப்போவை வெளியேற்றி விட்டாயே!'' என்று அவனைத் தூக்கிக் கொண்டு கூத்தாடினார். ரங்கன் கையிலிருந்த பாப்கார்ன் பை காலி! ஹிப்போ 'இன்னும் இல்லையா?' என்பது போலத் தலையை நிமிர்த்திப் பார்த்தது. மறுபடியும் அது குட்டைக்குள் ஓடிவிடப் போகிறதே என்று பயந்து விட்டார் அந்தச் சர்க்கஸ் மானேஜர். ''தம்பி! பாப்கார்னைக் காட்டியே இதை எங்கள் கூடாரத்துக்குக் கூட்டிக் கொண்டு போய் விடலாம் போலிருக்கிறதே. ஆனால் அதற்கு ஏராளமான பாப்கார்ன் தேவைப்படுமே. நீ எங்கிருந்து வாங்கி வந்தாய் இதை?'' என்றார். அவர் அந்த ஊருக்குப் புதிதாயிற்றே.

''கவலைப் படாதீங்க. ராவுத்தர் கடையிலே நிறைய இருக்கு. வாங்க, நான் வாங்கித் தருகிறேன்'' என்றான் ரங்கன். அடுத்த சில விநாடிகளில் சர்க்கஸ் கம்பெனியின் கார் ராவுத்தர் கடைக்கு ரங்கனோடு விரைந்தது. அங்கிருந்த அத்தனை பாப்கார்ன் பாக்கெட்டுக்களையும் அள்ளிப் போட்டுக் கொண்டு குட்டைக்குத் திரும்பியது.

ருசிமிக்க பாப்கார்ன் கிடைக்காததால் குளிர்ந்த குட்டைக்குத் திரும்ப முயன்று கொண்டிருந்த ஹிப்போவின் முன்னால் பாப்கார்ன் பாக்கெட்டுகளை உடைத்துக் கொட்டினான் ரங்கன். ஆசையோடு திரும்பியது ஹிப்போ. இப்படியே நிறைய பாப்கார்ன் பாக்கெட்டுகளைக் காலி செய்தே தன்னைப் பின் தொடர வைத்துச் சர்க்கஸ் கூடாரத்துக்குள், ஹிப்போவுக்காக அவர்கள் வேலியிட்டு அமைத்திருந்த குட்டைக்குள் கொண்டு வந்து விட்டான் ரங்கன். ரங்கனை எல்லோரும் பாராட்டு பாராட்டு என்று பாராட்டினார்கள்! சர்க்கஸ்மானேஜர், ''தம்பி, இன்றுதான் சர்க்கஸ் ஆரம்பம். எங்கள் முக்கிய அயிட்டங்களில் ஹிப்போவும் ஒன்று. அது இப்படி ஓடி விட்டதே என்று ரொம்பக் கவலைப்பட்டுப் போனேன். நல்லவேளை! உன் சமயோசிதமான செய்கையால் கவலை தீர்ந்தது. நீ தினமும் சர்க்கஸ் பார்க்க வந்துவிடு. உனக்குக் கட்டணம் கிடையாது'' என்று அவன் இரு கைகளிலும் மீதமிருந்த இரண்டு பாப்கார்ன் பாக்கெட்டுக்களைக் கொடுத்து நன்றி கூறி அனுப்பினார்.

ராவுத்தருக்குத் தம் சரக்குகளெல்லாம் நொடியில் விற்றுப் போனதில் மகிழ்ச்சி.

வாத்துக்களுக்குக் குட்டையை ஆக்கிரமிப்புச் செய்த ஹிப்போ போனதில் மகிழ்ச்சி. சிறகுகளை விரித்து நீர்மீது பறந்தபடி ஒன்றையொன்று துரத்திப் பிடித்து விளையாடின, 'க்வாக் க்வாக்' ஒலியோடு.

ரங்கனுக்கும் மகிழ்ச்சியான மகிழ்ச்சி. தினமும் சர்க்கஸ் பார்க்கலாமே இலவசமாக. எல்லாம் ஹிப்போவால் வந்த சந்தோஷம். அதற்கும் கூடச் சந்தோஷம்தான். கரம் மசாலா பாப்கார்ன் கொடுத்தால் போதும், அது இப்போது சொன்னபடி யெல்லாம் கேட்கிறது.

காலம்


கே. நாகரத்தினம்


குளக் கரையில் குளக் கரையில்
கொக்கு இருக்குமாம் — நாளும்
குளத்து நீரில் மீன்களையே
கொத்த இருக்குமாம்.

சின்ன மீனும் பெரிய மீனும்
சேர்ந்து திரியுமாம் — நன்கு
சின்ன விழியைக் கொக்கு மூடிச்
சிறிது நடிக்குமாம்.

கொக்கின் அருகில் மெல்ல மீன்கள்
கூடி அலையுமாம் — உடனே
பக்கம் வந்த பெரிய மீனைப்
பார்த்துப் பிடிக்குமாம்!

காலம் ஒன்று காணும் வரையில்
காத்துக் கிடக்கணும் — நல்ல
காலம் வந்த உடனே நாமும்
கடமை புரியணும்!





இருட்டொன்று கண்டேன்!

மணி அண்ணன்

கந்த கோட்டத் தெருவிலே
காலைவேளை தன்னிலே
வந்து நின்ற குழந்தையை
வரவேற்ற தோர் காட்சியே

அந்தப் பக்கம் யானையொன்று
அசைந்து அசைந்து போனதை
இந்தப் பாப்பா பார்த்தது
ஏதோ சொல்ல நினைத்தது.

அம்மா கிட்டே போனது
அதிச யமா முழிச்சது
'இங்கே வந்து பாரம்மா,
இருட்டு ஒண்ணு போகுது !'

என்று சொன்ன குழந்தையை
எடுத்த ணைத்தாள் அன்னையும்
'நன்று சொன்னாய் கண்மணி
நானும் அதனைப் பார்த்தனம்'

'கோவில் யானை போகுது
கும்பி' டென்று சொல்லவே
தாவிக் குழந்தை அன்னையைத்
தழுவிக் கொண்டு சிரித்தது.

அலுமினியம்

ஏழைகளின் வெள்ளி என்று அலுமினியத்தை அழைப்பது வழக்கம். வெள்ளியைப் போலவே பளபளப்பும் ஜ்வலிப்பும் கொண்ட உலோகம் இது. இரும்பின் கனத்தில் மூன்றில் ஒரு பங்கு கனம்தான் இதற்கு. கம்பிகளாக — உரோமத்தை விட மெல்லியதாக — நீட்ட முடியும். மிக மெல்லிய காகிதத்தைப் போலத் தகடுகளாகப் பரத்த முடியும். பூமியில் கிடைக்கும் பல்வேறு உலோகங்களில் மிக அதிகமாகக் கிடைப்பது அலுமினியம்தான். பூமியின் மேல் பரப்பில் எட்டுச் சதவிகிதம்வரை அலுமினியம் உள்ளது. தனிப்பட்ட நிலையில் இயற்கையாக அலுமினியம் கிடைக்காது. பல்வேறு பொருள்களோடு கலந்தே கிடைக்கிறது. விலையுயர்ந்த ரத்தினக் கற்களில் பல அலுமினியத்தின் கூட்டுப் பொருள்கள்தான்.

பல்வேறு நிலையில் பல பொருள்களுடன் கலந்து கிடைக்கும் அலுமினியக் கனிஜத்திலிருந்து இதைத் தனியாகப் பிரித்தெடுப்பது எப்படி? அதுவும் மலிவான விலையில் கிடைக்கும்படி. 1886ம் ஆண்டு பிப்ரவரி 26ந் தேதி சார்லஸ் மார்ட்டின் ஹால் என்ற 22 வயதுள்ள விஞ்ஞானி மலிவான முறையிலும் ஏராளமாகவும் அலுமினியத்தைப் பிரித்தெடுக்கும் முறையைக் கண்டார். அலுமினியம், சோடியம், புளோரைன் ஆகியவை கலந்த கூட்டுக்குக் கிரையோலைட் (Cryolite) என்று பெயர். இதை உருக்கி இத்துடன் சிறிய அளவில் அலுமினியம் ஆக்ஸைடை ஹால் கலந்தார். இக்கலவையைக் கரியாலான ஒரு பாத்திரத்தில் வைத்து அதில் மின்சாரத்தை நேரடியாகப் பாய்ச்சினார். இரண்டு மணி நேரத்தில் இந்தப் பாத்திரத்தின் அடியில் ஏராளமான அலுமினிய உலோக மணிகள் உருவாகியிருந்தன. இன்று உலகத்துக்குத் தேவையான அத்தனை அலுமினியமும் இதே முறையில்தான் பிரித்தெடுக்கப்படுகிறது.

கிரையோலைட் கிரீன்லாந்தில் மட்டுமே கிடைக்கிறது. பாக்ஸைட் என்ற அலுமினியக் கலவை உலகின் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கிறது. ஆனால் இது சுத்தமானதல்ல. இதிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்க இதைச் சுத்தப் படுத்த வேண்டும்.




அந்துப் பூச்சி

பூச்சிகளோடு மனிதன் தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டுதான் இருக்கிறான். பூச்சிகளும் தொடர்ந்து பெருகிக் கொண்டுதான் இருக்கின்றன. மனித இனத்துக்கு அதிகமான உபத்திரவத்தைத் தருவது வீவில் (Weevil) என்ற பூச்சிகள்தான். வண்டு (Beetle) வகையில் ஓர் உட்பிரிவைச் சேர்ந்தவைதான் இந்த வீவில்கள். ஆனாலும் இவைகள் பூச்சி உலகில் மிகப் பெரிய தனிப்பட்ட இனமாக இருக்கின்றன.

அநேகமாக இவை சிறியதாகவே இருக்கும். தலையில் துதிக்கை போலவோ கத்தியைப் போலவோ நீண்டிருக்கும் உறுப்பைக் கொண்டு இவைகளை இனம் கண்டு கொள்ளலாம். துருத்திக் கொண்டிருக்கும் இந்த உறுப்பின் நுனியில் இதன் வாய் இருக்கும். பெண் இனம் இத்தகைய அவயவத்தைத் தங்கள் முட்டைகளை இடுவதற்குத் துளை போடப் பயன் படுத்துகிறது. இந்த வீவில்கள் சரியான பகாசுரன்கள். ஏராளமான தாவர உணவை உண்ணக் கூடியவை.

அகோரப் பசியும், ஏராளமான இனப் பெருக்கமும் மட்டுமே தாவரங்களை இவை அழிப்பதற்குக் காரணமாகாது. தாவரங்களின் மிக முக்கியமான பகுதிகளை, மர்மஸ்தானங்களான மொட்டு, பழம், விதை, குருத்து, பட்டைகளுக்கு அடியில் உள்ள உயிர்ச் சத்து ஆகிய இடங்களை இவை தாக்குவதே காரணம். வீவில்லினால் இந்த இடங்களில் தாக்கப் பட்ட தாவரம் பிறகு பிழைப்பதில்லை.

சோளம், கோதுமை, பார்லி ஆகிய விதைகளைத் தாக்கும் வீவில்கள் ஒரு வகை. இதுதான் வீவில்களிலேயே மிகவும் மோசமானது. நெல்லைத் தாக்கி அழிக்கும் வீவில்களை நாம் அந்துப் பூச்சி என்கிறோம். பருத்திச் செடிகளைத் தாக்கும் வீவிலுக்கு காட்டன் பால் வீவில் என்று பெயர். உலகில் உள்ள பருத்தி விளைச்சலை நாசமாக்கிப் பெரு நஷ்டம் ஏற்படுத்துகிறது இது. வட அமெரிக்காவில் மட்டும் 2500 வகை வீவில்கள் காணப்படுகின்றன என்றால் மனித இனத்தின் எத்தகைய பெரிய எதிரி இந்த வீவில்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.



ருமாடிசம் (கீல் வாதம்)

கீல்வாதம் என்பது உண்மையில் ஒரு வியாதி. உடலின் மூட்டுக்களில் ஏற்படும் ஒருவகை வீக்கம். இந்த நோயைக் கவனித்துக் கட்டுப்படுத்தாவிடில் நிலைமை மோசமாகி மனிதனை நடமாட்டம் இல்லாமல் செய்துவிடும். முழங்கால், முழங்கை, மணிக்கட்டு, தோள்பட்டை ஆகிய மூட்டுக்களிலுள்ள மெல்லிய ஜவ்வுகளில் வீக்கம் ஏற்படுவதிலிருந்து இந்நோய் ஆரம்பமாகிறது. குருத்தெலும்பையும் இது பாதிக்கும். இதனால் எலும்புகளில் மாற்றமும் ஏற்படும். எலும்புக்குத் தேவையான சில உலோக உப்புக்களில் குறைவு ஏற்படுவதால் எலும்பு தன் உறுதித் தன்மையை இழக்கும். மூட்டுக்களில் அசைக்க முடியாத அவஸ்த்தை ஏற்படும். அப்பகுதிகளைப் பயன்படுத்த முடியாத நிலையும் உண்டாகும்.

ருமாடிசம் ஏற்படுவதற்கான காரணங்கள் இவைதான் என்று இன்னும் உறுதியாக எதுவும் நிரூபிக்கப்படவில்லை. ஒரு சாரார், தொத்து நோயினால் இது மூன்று வழிகளால் ஏற்படுவதாகக் கருதுகிறார்கள். கிருமிகள் ரத்தத்தின் மூலம் மூட்டுக்களுக்குச் சென்று தாக்குகிறதாம். வேறு வியாதிக் கிருமிகள் தயாரித்து வெளியிடும் விஷத்தினால் மூட்டுக்களில் இந்நோய் பரவுகிறதாம். சில உயிர்ச் சத்துக்கள் மூட்டுக்களுக்கு அலர்ஜியாக இருப்பதும் ஒரு காரணமாம்.

ஒருவகை மனிதர்களுக்குத்தான் மற்றவர்களைவிட அதிகமாக இக் கீல்வாத நோய் வருவதாக வைத்தியர்கள் கருதுகிறார்கள். இருபதிலிருந்து நாற்பது வரையுள்ளவர்களுக்கும் மெலிந்த உடலுடையவர்களுக்கும் விரைவில் சோர்வடைகிறவர்களுக்கும் சுறுசுறுப்பும் பலமும் அற்றவர்களுக்கும் இது வருகிறது. இந்நோயின் அறிகுறி காய்ச்சல், வலி, மூட்டுக்களில் வீக்கம். நோயாளி பலவீனமாகி சோர்வடைவான். நிறை குறையும். கைகால்கள் செயலற்றது போன்ற உணர்வு ஏற்படும்.

உடலில் எந்த இணைப்பும் ருமாடிசத்தினால் தாக்கப்படலாம்.




முதல் ஊசி

ஊசியைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? நளினமான கருவி அது. ஒரு பக்கம் கூரான முனையும், மறுபக்கம் நூலைக் கோர்ப்பதற்கான துளை—இதைக் கண் என்றும் காதென்றும் கூறுவார்கள்—உடையதாக இருக்கும். ஆதி மனிதனுக்கு ஊசி என்றொரு கருவியை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஏன் எப்படித் தோன்றியது என்பதற்கு ஆதாரம் கிடையாது. முதல் ஊசியை யார் கண்டு பிடித்தார்கள் என்பதும் தெரியாது. ஆதி ஊசிகள் எலும்பு, தந்தம், மரம், தாவர முட்கள், உலோகம் இவைகளால் ஆனவை. கற்கால மனிதர்களிடையே மீன், பறவைகளின் எலும்பிலான முழுமையான ஊசிகள் புழக்கத்தில் இருந்தன என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

பல ஆயிரம் ஆண்டுகளாக நாகரிகமடைந்த இனத்தவரிடையே எலும்புகளினால் உருவாக்கப்பட்ட, ஒரு முனையில் துளையோடு கூடிய ஊசிகள் புழக்கத்திலிருந்திருக்கிறது. கல்லினால் ஆன ஊசிகளும் கூட உண்டு. புராதன எகிப்தியர்களின் கல்லறைகளில் இத்தகைய ஊசிகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள். ரோமானியர்கள் வெண்கலம், இரும்பு இவைகளால் ஆன ஊசிகளைப் பயன்படுத்தினர். 'பாம்பி' யின் இடிபாடுகளிடையே இத்தகைய நல்ல ஊசிகள் கிடைத்துள்ளன.

இன்று நாம் பயன்படுத்தும் இரும்பு ஊசிகளை முதன் முதலில் உருவாக்கியவர்கள் சீனர்கள்தான். மத்திய காலத்தில் மூர் என்ற இனத்தவரால் இது சீனாவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டு போகப்பட்டது. முதல் இரும்பு ஊசி ஐரோப்பாவில் 14ம் நூற்றாண்டில் ஜெர்மனியிலுள்ள நியூரம்பர்க் நகரில்தான் செய்யப்பட்டது. முதலாவது எலிஸபெத் ராணியின் ஆட்சியில் எலியாஸ் க்ரௌஸ் (Eliar Grouse) என்ற ஜெர்மானியரிடமிருந்து ஊசி தயாரிக்கும் கலையை முதன் முதலில் ஆங்கிலேயர் அறிந்தார்கள். இன்று உலகில் ஊசி தயாரிக்கும் முக்கியமான இரு நாடுகளில் ஒன்றாக இங்கிலாந்து விளங்குகிறது. மற்றது பிரான்ஸ். பார்வைக்கு மிக எளிதாகத் தோன்றினாலும் ஊசி தயாரிப்பது அப்படியொன்றும் சுலபமல்ல. இருபது தொழில் கலைஞர்களின் கரங்களில் தவழ்ந்த பிறகே ஓர் ஊசி தனது முழு வடிவைப் பெறுகிறது.





மன்பஞ்சா என்று ஒரு நகரம். அங்கே சௌஸூடன் என்று ஒரு ராஜ குமாரன் இருந்தான். அவன் மிகவும் நல்லவன், வீரன், பலமுள்ளவன். குடி மக்களிடம் அன்பாகப் பழகி வந்தான். அவர்களும் அவனை நேசித்தார்கள். நாடு அமைதியாகவும் சண்டை பூசல்கள் இல்லாமலும் சந்தோஷமா யிருந்தது.


ஒரு நாள் இரவு. அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அப்போது அழகான ஒரு கனவு கண்டான். கனவில் ஓர் அழகான தோகை மயில் வந்து ஆடியது. பிறகு அது ஓர் அழகான இளம் பெண்ணாக மாறியது. அவளுடைய அழகு அவனை மெய்ம்மறக்கச் செய்தது. உலகத்திலேயே இவள்தான் அழகி என்று நினைத்தான். சற்று நேரத்தில் கனவு கலைந்தது.

அவன் தன் தகப்பனாரிடம், ''அப்பா! நான் கனவிலே ஒரு பேரழகியைக் கண்டேன். மயில் இராஜகுமாரியான அவள். அட்டா! என்ன அழகு!'' என்றான்.

''என்னது? மயில் இராஜகுமாரியா? மயிலாவது அழகான இராஜகுமாரியாவதாவது? அது வெறும் கனவு. கனவுகள் முட்டாள்களின் பேச்சு'' என்றான் மன்னன்.

எத்தனையோ அழகான இராஜ குமாரிகள் அவனைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினார்கள். அவனோ







ஒரே பிடிவாதமாக ''நான் அந்த மயிலியைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன். நான் உலகம் முழுவதும் சுற்றி எப்படியாவது அவளைக் கண்டுபிடித்துக் கொண்டு வருவேன்'' என்று சபதம் செய்து கொண்டான்.

ஒரு நல்ல நாளிலே அவன் புறப்பட்டான். மலைகள் காடுகள் எல்லாவற்றையும் தாண்டிக் கொண்டு போனான். போனான், போனான், போய்க்கொண்டே இருந்தான். வழியில் கண்ட மனிதர்களிடமெல்லாம் 'மயில் இராஜகுமாரி எங்கே இருப்பாள் ?' என்று கேட்டுக் கொண்டே போனான். கேட்டவர்கள் பரிகாசமான குரலில், ''மயில் இராஜ்குமாரி என்று ஒருத்தி இருப்பாளா, என்ன?'' என்று சிரித்தார்கள்.

கடைசியாக அவன் ஒரு காட்டுக் கருகில் இருந்த ஒரு சிற்றூருக்கு வந்து சேர்ந்தான். அங்கே பாதை ஓரத்தில் ஒரு தொண்டு கிழவி உட்கார்ந்திருந்தாள். அவன் அருகில் போய்க் குனிந்து, ''மயில் ராஜகுமாரியை எங்கே பார்க்கலாம்?'' என்று கேட்டான்.

''அவள் எனக்குத் தெரியாது. இந்தக் காட்டிலே ஒரு குகை இருக்கிறது. அதில் ஒரு பெரியவர் இருக்கிறார். அவருக்குத்



தெரியாத செய்தியே கிடையாது. அவரைப் போய்க் கேட்டுப் பார்'' என்றாள்.

''சரி'' என்று அவன் காட்டுக்குள் வெகுதூரம் சென்று நடுக் காட்டுக்கு வந்தான். அங்கே ஓர் அழகான சிறு குன்று. அதில் ஒரு குகையும் தெரிந்தது. அவன் உரத்த குரலில் ''ஐயா பெரியவரே, பெரியவரே!'' என்று கூவினான்.

குகையிலிருந்து ஒரு பெரியவர் வந்தார். ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''மயில் இளவரசியைக் கண்டு பிடிக்க வேண்டும்'' என்றான் இளவரசன்.

''எந்த மயில் இளவரசி? அவர்கள் ஏழு பேர்கள் இருக்கிறார்களே?'' என்றார் பெரியவர்.

சௌஸ¬டன் தான் கண்ட கனவைப் பற்றிச் சொன்னான். ''பிறகு நான் அந்த மயிலியைத் தவிர யாரையுமே கல்யாணம் செய்து கொள்ளமாட்டேன்'' என்றான்.

''என்னோடு வா. இங்கே ஒரு நீல ஏரி இருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஏழாவது நாள் அந்த ஏரியில் விளையாடிக் குளிக்க வருவார்கள். அந்த இடத்தைக் காட்டுகிறேன்'' என்று அழைத்துப் போனான்.

இருவரும் ஏரியை அடைந்தார்கள். ஏரியின் தண்ணீர் வான மண்டலம் போல் அழகிய நீல நிறமாயிருந்தது.

''ஒவ்வொரு மாதத்திலும் ஏழாவது நாள் அந்த ஏழு பெண்களும் இங்கு வருவார்கள். மயில் போல் தோன்றுவார்கள். ஆனால் அவர்கள் பெண்கள் தான். தங்கள் மேல் உள்ள மயில் உடுப்பைக் களைந்து வைத்துவிட்டு நீராடுவார்கள். கடைசிப் பெண்தான் மிகவும் அழகி. அவள் பெயர் நன்னு. அவள்தான் நீ கனவில் கண்டவளாயிருக்க வேணும்'' என்றார் பெரியவர்.

இருவரும் ஒரு மரத்தின் மறைவிலே ஒளிந்து கொண்டார்கள். பிறகு பெரியவர் மிகவும் இரகசியமான குரலில், ''இன்று மாதத்தின் ஏழாவது நாள். கட்டாயம் அப்பெண்கள் வந்து விடுவார்கள்'' என்றார்.

சற்று நேரத்துக்கெல்லாம் வான வீதியிலே ஓர் இனிமையான நாதம் கேட்டது. ஏழு வண்ணப் பறவைகள் பறந்து வந்தன. ஏரிக் கரையில் வந்து இறங்கித் தங்கள் மயில் உடுப்பைக் களைந்து வைத்துவிட்டுப் பெண்களாக மாறிப் பாடிக் கொண்டு ஏரியில் இறங்கி விளையாடினார்கள்.

''அதோ அந்தக் கடைசியில் இருக்கும் அழகிதான் என் கனவில் வந்தவள். அவளைப் போன்ற கட்டழகி உலகில் ஒருவரும் இல்லை'' என்றான் இளவரசன்.

ஆயிற்று. வெகுநேரம் ஆயிற்று. அழகிகள் கரை ஏறித் தங்கள் மயில் ஆடைகளை அணிந்து கொண்டனர்.

''ஏ! இளவரசி நன்னு! நீ பறக்குமுன் உன்னுடன் சில வார்த்தைகள் பேச வேணும்'' என்றான் இளவரசன்.

''நீ யார்?'' என்றாள் அவள்.

''நான் மன்பஞ்சா நாட்டு இளவரசன். நான் நல்லவன். உனக்கு எந்தவிதமான தீங்கும் செய்யமாட்டேன்'' என்றான்.

நன்னு சற்றே நின்றாள். இளவரசனோடு பேசினாள். அவளுக்கு அவனைப் பிடித்துப் போயிற்று. அவன் கையில் அவள் ஒரு மோதிரத்தைக் கொடுத்து ''இந்த மோதிரத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து வை. இதில் உள்ள செம்புக் கல்லிலே நீ என்னைப் பார்க்க விரும்பும் போதெல்லாம் பார்க்கலாம்'' என்றாள்.

''அது முடியாது. என்னோடு என் நாட்டுக்கு வா. நான் உன்னை என் பட்டத்து ராணியாக ஏற்று மணம் செய்து கொள்ளுகிறேன். அப்பொழுது தான் உன்னை நான் விரும்பும்போதெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்க முடியும்'' என்றான். அவள் புன்சிரிப்புச் சிரித்தாள்.

சௌஸ¬டன் நன்னுவை அழைத்துக் கொண்டு தன் நகருக்கு வந்தான்.

அவன் பெற்றோருக்கு நன்னுவைப் பிடித்துவிட்டது. ஆகவே அவளுக்கு அன்பும் ஆதரவும் அளித்தார்கள்.

அந்த ஊரில் ஒரு பிரபு இருந்தான். அவன் மன்னருக்கு நெருங்கிய தோழன். யுத்த சமயங்களில் நிறைய உதவி செய்தவன். நாட்டை ஆளுவதிலும் அவன் உதவிகள் செய்வான். முன்பின் தெரியாத ஓர் அழகியை இளவரசன் அழைத்து வந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கு ஓர் அழகான பெண் இருந்தாள். அவளை இளவரசனுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேணும் என்று ஆசையோடு காத்திருந்தான்.

பக்கத்திலே ஒரு நாடு. அதன் அரசனுக்கு இந்தப் பிரபு, இளவரசன் நன்னுவை அழைத்து வந்திருப்பதை எழுதி, 'அவன் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதை நாங்கள் விரும்பவில்லை. இதற்கு ஏதாவதொரு தந்திரம் செய்ய வேணும். நீ உன் படைகளை அழைத்துக் கொண்டு வந்து கல்யாணத்தை நிறுத்த முயற்சி செய்.

பணிவைக் கற்போம்!

'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பது மூதுரை. அமரர் என்பது இஸ்லாமிய மரபுப்படி வானோர்களைக் குறிப்பதானாலும் தமிழர் மரபில் மாமனிதர்களையும் மனிதரில் புனித மானவர்களையும் குறிக்கும்.

அடக்கத்துக்கு அழகூட்டும் அணி கலனாகவும் பணிவுக்குப் பெருமை சேர்க்கும் புனிதராகவும் வாழ்ந்தவர்கள் எம்பெருமானார் நபிகள் நாயகம் அவர்கள். செயற்கரிய சேவை செய்து புகழ்ச்சியில் உயர்ந்து நின்ற போதெல்லாம் தங்களுக்குச் சூட்டப்பட்ட புகழாரங்களையெல்லாம் பணிவுடன் அல்லாவின்பால் சேர்த்து அடக்கத்துடன் வாழ்ந்தார்கள்.

அருங் கல்வி பெற்ற அறிஞர்க்கும், பெரும் பொருளீட்டிய செல்வர்க்கும் பணிவும் அடக்கமும் மிகவும் அவசியமானவையாகும். அடக்கமில்லா அறிஞர்களின் கல்வியறிவு மக்களை நேர்வழிப்படுத்தாது. பணி இல்லாத செல்வந்தரின் பொருள் அவனையே தவறான வழிகளில் திருப்பி விடும்.

''நீங்கள் என்னை அதிகமாகப் புகழாதீர்கள். நான் நிச்சயமாக இறைவனின் அடிமைதான். எனவே என்னை நீங்கள் 'இறையடியாரே, இறைவனின் தூதரே!' என அழையுங்கள்'' என்று நபிகள்நாயகம் கூறுவார்கள்.

எத்தகைய நோயாளியாயினும் அவரிடம் சென்று நலம் விசாரிப்பார்கள், அண்ணல் நபி அவர்கள். இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு ஜனாஸாத் தொழுகைக்கும் அடக்கம் செய்வதற்கும் உடன் செல்வார்கள். ஒட்டகத்தின் மீதும் குதிரை மீதும் செல்ல வசதி இருந்தும் கோவேறு கழுதையின் மீதே சவாரி செய்வார்கள். அடிமையின் அழைப்பையும் ஏற்றுக் கொள்ளுவார்கள். தம் நண்பர்களைக் காணவில்லையெனில் பெருமானார் அவர்கள், அவர்களைத் தேடுவார்கள். மற்றவர்களிடம் அவர்களின் நலன் பற்றி விசாரிப்பார்கள்.

மாமன்னருக்கு உரிய தகுதியுடன் வசதியுடன் நபிகள் பெருமானாரின் இறுதிக் காலம் அமைந்திருந்தபோதும் தமது வேலைகளைத் தாமே செய்தார்கள் என்பது அவருடைய அடக்கத்துக்கும் பணிவுக்கும் மிகச் சிறந்த சான்றாகும். அந்தப் புனிதரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் நமது வாழ்வை அமைத்துக் கொள்வோமாக.

பெருமகனாரின் வாழ்வும் வாக்கும்
ஆதாரம்: மிஹ்ரா

நான் உனக்கு உதவி செய்கிறேன்' என்று ஓலை எழுதி இரகசியமாய் அனுப்பினான்.

கல்யாண ஏற்பாடுகள் வெகு விமரிசையாய் நடந்து கொண்டிருந்தன. ஆனால் திருமணத்துக்கு முதல் நாள் காலை அண்டை நாட்டு அரசன் படையோடு வந்து நகரத்தைச் சூழ்ந்து கொண்டான்.

இரு தரத்துப் படைகளும் எதிர்த்துச் சண்டையிட்டன. அப்பொழுது வஞ்சகனான பிரபு தன் அரசனிடம் வந்து, ''சண்டை கடுமையாக நடக்கிறது. இளவரசன் சௌஸுடன் இறந்து போய் விட்டான். இளவரசி நன்னு அவன் கைவசம் ஆகும் வரை சண்டை போடுவான் போலிருக்கிறது'' என்றான். மற்றவர்கள் சொன்னார்கள்: ''அவன் நன்னுவுக்காகவே சண்டையை ஆரம்பித்தான். அவளைக் கொன்றுவிடுவோம். அவன் ஓடிப் போவான்.

இந்த வார்த்தைகள் நன்னுவுக்குத் தெரிந்தது. அவள் அரசன் முன் வந்து, ''நானும் சாகத்தான் விரும்புகிறேன். ஆனால் என்னுடைய மயில் ஆடையுடன் தான் சாவேன்'' என்றாள்.

அரசர் மிகுந்த வருத்தத்துடன் அவளுடைய மயில் ஆடையை எடுத்துக் கொடுத்தார். அவளும் அதை வாங்கி அணிந்து கொண்டாள்.

மயில் ஆடையை அவள் அணிந்தாளோ இல்லையோ அடுத்த வினாடி அவள் மயிலாக மாறித் தோகையை விரித்துப் பறக்க ஆரம்பித்தாள். அவள் மேலே மேலே பறந்து மேக மண்டலத்தில் மறைந்தே போனாள். அவள் தன் சொந்த நாட்டுக்குப் பறந்தே போய் விட்டாள்.

சௌஸுடன் யுத்தத்தில் வெற்றி வாகை சூடி வீடு திரும்பினான். 'அவள் எங்கே? என் மனைவி நன்னு எங்கே?' என்று கேட்டான். மன்னர் நடந்ததைக் கூறினார். அப்போதுதான் நண்பனாக நினைத்த அந்தப் பிரபு செய்த சூழ்ச்சி அவனுக்குப் புரிந்தது. அடுத்த நிமிஷம் இளவரசனின் வாள் துரோகியான பிரபுவின் உயிரைக் குடித்தது. அதனால் அருமை மனைவி நன்னு திரும்பு

வாளா? இல்லையே. 'எப்படியாவது மயில் இளவரசி நன்னாவைக் கண்டு பிடித்தே தீருவேன்' என்று உறுதி கொண்டான் இளவரசன்.

அவளை முதல் முதலாகச் சந்தித்த அந்த ஏரிக் கரையை நோக்கி நடந்தான். உதவி செய்த பெரியவரைச் சந்தித்து நடந்ததெல்லாம் சொன்னான். அவர் மிகுந்த கவலையோடு சொன்னார். ''அப்பா! மகனே! அது நீண்ட பிரயாணம். வழியில் தண்ணீரே இல்லாத பாலைவனம். அதையும் தாண்டினால் வெள்ளி மலை. அந்த மலையின் பாறைகள் வழுக்கும் பளிங்குக் கற்களால் ஆனது. இவை தவிர, ஒரு கொதிக்கும் வெந்நீர் ஆறு உள்ளது. அதை நீந்தியே கடக்க வேணும். பாலம் ஏதும் கிடையாது. இவ்வளவு பயங்கரமான பாதைகளை நீ தாண்டிப் போக முடியுமா?'' என்று கேட்டார்.

''ஆகா! கட்டாயம் முடியும். அவள் இல்லாமல் என்னால் வாழ்வே முடியாது'' என்றான் இளவரசன்.

''சரி! நான் ஒரு மந்திரக் கோல் தருகிறேன். அது உனக்கு மயில் நகரத்துக்கு வழி காட்டிக் கொண்டே போகும். உன்னை அபாயங்களிலிருந்தும் காப்பாற்றும்'' என்று சொல்லி மந்திரக் கோலைக் கொடுத்தார்.

இளவரசன் வெகுநாட்கள் தண்ணீரே இல்லாத பாலைவனத்தில் நடந்தான். வெயில் அனலாய்க் காய்ந்தது. ஒரு பெரிய பாறைக்கருகிலே சுருண்டு விழுந்துவிட்டான். 'இனி மேல் நான் சாக வேண்டியதுதான். நன்னாவைப் பார்க்காமலேயேதான் சாக வேணும்!'' என்று நினைத்தான். அப்பொழுதுதான் அவனுக்கு மந்திரக்கோலின் நினைவு வந்தது. அதை எடுத்துப் பாறையில் தட்டினான். பாறையின் அடியிலிருந்து ஒரு நீரூற்றுப் பீறிட்டு எழுந்தது. அதன் தண்ணீர் அமிருதம் போலவும் சில்லென்று குளிர்ந்தும் இருந்தது. அவன் பிழைத்து எழுந்தான்.

பிறகு மெல்ல மெல்ல வெள்ளி மலையை அடைந்தான். அதில் ஏற முயன்றான். பல முறை வழுக்கி வழுக்கிக் கீழே விழுந்தான். எங்கே காலை வைத்து எப்படி ஏறுவது என்று திகைத்துப் போனான். பிறகு மந்திரக் கோலின் உதவியை நாடினான். மலை கதவு போலத் திறந்து வழிவிட்டது. அதற்குள் புகுந்து மறு பக்கம் வந்தான்.

மறுபுறம் இருள் சூழ்ந்த அடர்ந்த காடு. அதில் பிரம்மாண்டமான இரண்டு பட்சிகள் ஒரு மரத்தின்மேல் இருப்பதைப் பார்த்தான். மெல்ல அந்த மரத்தின் மேல் ஏறி ஒரு பறவையின் இறகுகளுக்குள் புகுந்து கொண்டான்.

மறு நாள் காலை அந்த இராட்சதப் பறவைகள் அடுத்திருந்த வெந்நீர் ஆற்றைத் தாண்டி மயில் அரசனுடைய நகரத்துக்குள் சென்றன.

செளலைடன் மெதுவாக மரத்திலிருந்து இறங்கி நகரத்தின் வீதிகளில் நடந்தான். 'அடாடா! என்ன அழகான நகரம்?' என்று ஆச்சரியப்பட்டான். அங்கே அவன் எதிரே ஒரு பெண் குடத்திலே தண்ணீரைச் சுமந்து கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தாள். அவளை நெருங்கி, ''நீ யார்? எங்கே போகிறாய்?'' என்றான்.

''நான் இளவரசி நன்னாவுக்குத் தண்ணீர் எடுத்துப் போகிறேன்'' என்றாள்.

அவளுடன் பேசிக் கொண்டே நடந்து அவள் பார்க்காமலிருக்கும்போது தன் கையிலிருந்த அவள் தந்த மோதிரத்தை அந்தக் குடத்துக்குள் போட்டுவிட்டான்.


தண்ணீர்க் குடம் அரண்மனைக்குள் போயிற்று. இளவரசி நன்னா தண்ணீரை மேலே ஊற்றிக் கொண்ட பொழுது மோதிரம் டண் என்ற ஓசையுடன் விழுந்தது. நன்னா அதைக் கையில் எடுத்தாள். ''இது என் மோதிரம். இதை நான் என் காதலருக்கல்லவா கொடுத்தேன்? இது எப்படி இங்கே வந்தது?'' என்றாள்.

''அம்மா! நான் வீதி வழியே போகும்போது ஓர் அழகான மனிதனைச் சந்தித்தேன். தண்ணீர் யாருக்கு?' என்று கேட்டார். நான் உங்களுக்கு என்றேன். அவர்தான் இந்த மோதிரத்தைக் குடத்துக்குள் போட்டிருக்க வேண்டும்'' என்றாள் தோழிப் பெண்.


''அப்படியானால் அவர் இறக்கவில்லை. இருக்கிறார், இருக்கிறார்!'' என்று சந்தோஷத்துடன் கூவினாள் இளவரசி. 'அவரே என்னைத் தேடி வந்திருக்கிறார்!' என்று குதூகலப்பட்டாள்.

உடனே செய்தி பறந்தது. மயில் அரசன் இளவரசனை எதிர்கொண்டு வரவேற்றான். ''நீ இந்த மயில் நாட்டுக்கும் அரசனாக இரு. உன் தந்தைக்கு நான் இன்றைக்கே ஓலை எழுதுகிறேன்'' என்றான் மயில் அரசன்.

மங்கள வாத்தியங்கள் முழங்க இளவரசன் மயிலழகியை மணந்து கொண்டு வெகு காலம் சந்தோஷமாக வாழ்ந்திருந்தான்.


ஏண்டி இப்படி ஒய்ந்துபோய் உட்கார்ந்துட்டே?
இன்னிக்கு எங்க டீச்சர் ஆஸ்திரேலியா எங்கே இருக்குன்னு கேட்டாங்க. தெரியலேன்னேன். பெஞ்சு மேலே நிக்க வைச்சுட்டாங்க.
அட பாவமே! சின்ன வயசிலே என்னையும் இதே கேள்வியைத்தான் கேட்டாங்க. அதை இன்னமுமா கண்டுபிடிக்கல்லே.
கடைவீதிப்பக்கமாக நான் வரபோதெல்லாம் பார்ப்பேன், பெட்டிக்கடைக் கல்லாவிலே உங்க மகன் தூங்கிக்கிட்டே இருக்கான்
அப்படியா? எதிர்க் கடையிலே உள்ள கல்லாவிலே நான் உட்கார்ந்துக்கிட்டிருப்பேனே, என்னை எழுப்பிச் சொல்லக் கூடாது?
சித்திரங்கள்: செல்லம்
உங்கள் சங்கத்தின் முன்னாலே ஏன் இத்தனை ஆண்டிகள் நின்று கொண்டிருக்கிறார்கள்?
அதை ஏன் கேட்கிறாய், 'இரண்டாவது ஆண்டு விழா' என்பதற்குப் பதில் 'ஆண்டி விழா' என்று தவறாக நோட்டீஸ் போட்டுவிட்டார்கள். அதனால் வந்த வினை.
மிஸ் நன்னு தேவி, வழக்கமாக நீங்கள் உங்கள் வயதை 18 என்றுதானே கூறுவீர்கள். இன்று ஏன் 22 எனக் கூறுகிறீர்கள்?
நேற்று ஒரு பத்திரிகையில் என் வயதை 18 என்று போடுவதற்குப் பதில் 81 என்று மாற்றிப் போட்டுவிட்டார்கள். 22 ஐ அப்படி மாற்றிப்போட முடியாதில்லையா. அதனால்தான்.
ஏண்டி இப்படி ஆடிக்கொண்டே பெருக்குகிறாய்?
நீதானே 'நாளைக்கு ஆடிப்பெருக்கு' என்று நேற்றுக் கூறினாய்.


ஜெய் ஹனுமான்
3
கதை: ரா.கணபதி
சித்திரம்: வினு
வாயுவின் மைந்தன் வஜ்ராயுதத்தினால் அடிபட்டு விழுந்த அதே சமயம் அன்னை அஞ்சனை....
... இங்கே விட்டுப் போன என் குழந்தையைக் காணவில்லையே, ஐயோ, என்ன ஆபத்தோ...?
அங்கே வாயு தேவன்...
இந்திரா, என் குழந்தையை அடித்து வீழ்த்தி விட்டாயல்லவா! இரு, இரு என் வலிமையையும் காட்டுகிறேன் பார். காற்றின் சஞ்சாரத்தையே நிறுத்தி விடுகிறேன்.
வாயுவின் கோபம் சகல ஜீவ ராசிகளையும் மூச்சு முட்டித் திணற வைக்கிறது. அடி பட்ட குழந்தையுடன் ஒரு குகைக்குள் போய் விடுகிறார் வாயு.
காற்றில்லாவிடில் எப்படி உயிர் வாழ முடியும்? தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் மூச்சுத் திணறல் ஏற்பட்டு, தாங்க முடியாத அவதிக்குட்பட்டார்கள்.
பிரம்மதேவா, வாயு தன் சஞ்சாரத்தை அடக்கிக் கொண்டு விட்டான். ஐயோ! எங்களால் பேசக்கூட முடியாத இந்த அவஸ்தையிலிருந்து நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்.


சின்னக் குழந்தையின்
விளையாட்டைச் சூரியன்
ரசிக்க வில்லையா? இந்திரன்
செய்தது தவறு. வாயுவின்
புத்திர சோகமும் கோபமும்
நியாயமே. வாயுவிடமே
போவோம் வாருங்கள்.
மூர்ச்சித்த நிலையிலும்
ஒளிரும் தீயைப் போல
ஜ்வலிக்கும் அந்தக் குழந்தையைப்
பாருங்கள். இக்குழந்தையை
வஜ்ராயுதம் கொண்டு தாக்க
இந்திரனுக்கு எப்படி
மனம் வந்தது?
பிரம்மனைக் கண்ட
வாயு வணங்கி
நிற்கிறான். நினைவற்ற
சிசுவை பிரும்மா
எடுத்துத் தம் மடியில்
கிடத்திக் கொண்டு...
காற்றின் அதிபதியே கலங்காதே. உன் மகனுக்கு
அபாயம் ஏதுமில்லை. இதோ பார், இவன் தாடை நேராகி விட்டது.
பிழைத்து விட்டான். நீயும் உன் கோபத்தை மறந்து ஜீவராசிகள்
சுவாசித்து வாழ அருள் செய்.
என் பங்கிக்கு நான்
என் அருள் பெற்ற பிரும்மா
ஸ்திரம் இவனுக்கு ஒரு
தீங்கும் செய்யாது என்று
வரம் தருகிறேன்.
வாயுவின் கோபம் தணிந்தது.
ஜீவராசிகளுக்கும் மூச்சுத்
திரும்பியது.
தேவர்களே! திருமால்
பூவுலகில் இராமனாக
அவதரிக்கப்போகிறார்.
நீங்களெல்லாம் வானரர்
களாகப் பிறந்து அவருக்கு
உதவப்போகிறீர்கள். வான
ரங்களில் தலைசிறந்தவனாக
இந்த அஞ்சனை மைந்தன்
விளங்கப் போகிறான். இவனை
நீங்கள் வாழ்த்தி வரம்
அளியுங்கள்..
தன் தவறு உணர்ந்த தேவேந்திரன்
வாயு குமாரன் அருகே சென்று தன்
கழுத்திலிருந்த தாமரை மாலையை
அணிவித்து....
என்னால் ஊனமடைந்த
(தாடை) ஹனு மறுபடி
நேராகியதால் இவன்
ஹனுமான் என்று
அழைக்கப்படட்டும்.
இவன் மீது யார்
இந்திராஸ்திரத்தைத்
தொடுத்தாலும் அது
பயனில்லாமல் போக
வரமளிக்கிறேன்.
தொடரும்



ஆமையின் அதிர்ஷ்டம்

விகேயெம்

காட்டில் உள்ள மிருகங்களெல்லாம் பொங்கல் விழா கொண்டாட முடிவு செய்தன. விழா என்றால் விருந்தில்லாமல் இருக்கலாமா? சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், வடை, பாயசம், கூட்டு, கறி, கோஸ¬மலி என்று அயிட்டங்கள் ஏராளமாக இருந்தன.

விருந்துக்கு முன்னால் விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள், விழாக் கமிட்டியார்.

'போட்டிகளில் ஏதாவதொன்றில் வெற்றி பெற்றுப் பரிசு பெற வேண்டும்' என்று ஆசைப்பட்டது ஆமை.

முதலில் ஓட்டப் பந்தயம். ஆமை தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்குள் நடு நிலையாளர் நரியார், ''ஓட்டப் பந்தயத்தில் புள்ளிமான் வெற்றி பெற்றது'' என்று அறிவித்தது. 'இதற்குள்ளாகவா ?' என்று ஆமை வியப்புடன் நகர்ந்தபோது மிருகங்களெல்லாம் கலகலவென்று நகைத்தன. முயல்தான் ரொம்பவும் கேலியாக ''என்ன ஆமையாரே, பழைய நினைப்போ உமக்கு ?'' என்று கூத்தாடியது. ஒரு காலத்தில் அது தன்னை ஓட்டப் பந்தயத்தில் வெற்றி கொண்டு அறியாப் பழியை ஏற்படுத்தி விட்டதற்காக எப்போதுமே ஆமையிடம் அதற்கு அநுதாபம் கிடையாது. முயலாரின் கேலியினால் தடுமாறிப் போய் உருண்டு விழ இருந்த ஆமைக்கு ஆந்தை கை கொடுக்கவே சமாளித்துக் கொண்டது.

'அடுத்துக் குதிக்கும் போட்டி' என்று அறிவிப்பாளரின்குரல் ஒலித்தது.

ஆமை அதிலும் கலந்து கொண்டது. பாவம் முன்னங் கால்களை ஊன்றித் தாவ முயன்றபோது கிர் என்று ஒரு சுற்றுச் சுற்றியது. அடுத்த விநாடி ஒரு குட்டிக் கரணம் போட்டுத் தன் நிலைக்கு வந்து நின்றது. அப்படியே மல்லாந்த நிலையில் தலையும் வயிறும் ஆகாயத்தை நோக்கிய நிலையில் இருந்திருந்தால் மிருகங்களின் கேலிக்கு ஆளாகி இருக்கும்? நல்ல வேளை, உருண்ட அதே வேகத்தில் நிமிர்ந்து விட்டது.

''தாண்டும் போட்டியில் முயல்தான் முதல்'' என்றது நரி. பாவம் ஆமையைச் சூழ்ந்து எல்லாம் கிண்டலும், கேலியுமாகக் கும்மாளமிட்டன. 'நான் நிதானமாக நடந்தால் அதற்காக எந்தப் போட்டிகளிலும் கலந்து கொள்ளக் கூடாதா என்ன?' என்று வேதனைப்பட்டது ஆமை மனத்துக்குள்.

அடுத்து நீச்சல் போட்டி.

'நான் நன்றாக நீந்துவேன். இதில் வெற்றி எனக்குத்தான்' என்று குதூகலத்துடன் கலந்து கொண்டது ஆமை. ஆனால் வெற்றி என்னவோ வாளை மீனுக்குத்தான் போயிற்று !

அடுத்த போட்டி...?

நரி அறிவித்தது: காட்டில் உள்ள நமக்கெல்லாம் ஒளிந்து கொள்ளுவதைப் பற்றித் தெரியும். நான் என் கண்களை மூடிக் கொண்டு பத்து எண்ணுவேன். அதற்குள் போட்டியில் கலந்து கொள்ளும் மிருகங்களெல்லாம் எங்காவது ஒளிந்து கொண்டுவிட வேண்டும். எந்தப் பிராணியை நான் கடைசியாகக் கண்டு பிடிக்கிறேனோ அதுவே வெற்றி பெற்றதாகக் கருதி பரிசு வழங்கப்படும்.

ஓட்டப் பந்தயம், தாண்டிக் குதித்தல், நீச்சல் எல்லாவற்றிலும் தோல்வி கண்டு துவண்டு போயிருந்த ஆமை, ''நான் இந்தப் பாறைக்கருகில் போய் ஒளிந்து கொள்ளுகிறேன்'' என்று கூறி மெதுவாகப் பாறையை நோக்கி நகர்ந்தது. அதன் துரதிர்ஷ்டம், அங்கு மரத்தின் வேர் ஒன்று தடுக்கி... பாவம், இந்தத் தடவை எழுந்திருக்க முடியாதபடி மல்லாந்துவிட்டது. நல்ல வேளை! கேலி செய்ய அருகில் யாரும் இல்லை. எல்லாரும் அவரவர் ஒளிந்து கொள்ளப் போய்விட்டார்கள். உதவி செய்யும் ஆந்தையும் இல்லை. முக்கி முக்கிப் பார்த்தது, நேராக நிமிருவதற்குச் சுற்றிச் சுற்றிச் சுழன்றதே தவிர அதனால் தானாக நிமிரவே முடியவில்லை. பல தடவை இப்படி முயற்சி செய்ததினால் ரொம்பவும் களைத்து வேறு போய்விட்டது.

'' நான் இப்படியே மல்லாந்த நிலையிலேயே கிடக்கிறேன், ஏதோ ஒரு பாறையைப் போல'' என்ற முடிவுடன் தன் தலை, கால்கள், வால்,எல்லாவற்றையும் உள்ளுக்கு இழுத்துக் கொண்டு அசையாமல் கிடந்தது ஆமை. அதன் அடி வயிறு பழுப்பும் பசுமையுமாக இருந்தது. பாறையும்கூடப் பழுப்பாகவும், அதன் மீது பாசி படிந்து பசுமையாகவும் இருக்கும் இல்லையா? உடல் பகுதிகளை உள்ளுக்கு இழுத்துக்கொண்ட நிலையில் அது ஒரு பாறைத் துண்டு போலவே இருந்தது.

சற்றைக்கெல்லாம் நரியின் குரல் கணீரென்று ஒலித்தது—''ஒன்—டூ—த்ரீ—அதோ முயல். ஒண் டூ த்ரீ.... அதோ மான்—ஒண் டூ த்ரீ — அதோ ஓநாய்'' இப்படியே ஒவ்வொரு மிருகமாகக் கண்டுபிடித்துச் சொல்லிக்கொண்டே வந்தது நரி.

'' ஆமாம், ஆமையை எங்கே காணோம் ?'' என்றன எல்லா மிருகங்களும். ''எங்காவது மல்லாந்து கிடக்கிறதா?''

''ஆமையாரே ஆமையாரே ! நீர்தான் வெற்றி பெற்றீர். மறைவிடத்திலிருந்து வாரும்'' என்றது நரி.

ஆமைக்கு நரியின் அழைப்பு காதில் விழுந்தது. ஆனால் அதனால் நிமிர்ந்து நேராகமுடியவில்லை. பாறைபோலிருந்த அது அசைவதை முயல்தான் முதலில் பார்த்தது. ''இதோ தலையும் வயிறும் மேலாகக் கிடக்கிறார், ஆமையார்!'' என்று தன் கால்களைத் தரையில் தம் தம் என்று தட்டி ஆர்ப்பரித்தது முயல்.


உடனே ஆந்தை ஓடிப் போய் அதற்கு உதவியது. ஆமை தன் சகஜ நிலைக்கு வந்து நின்றது.

''எல்லாரையும்விட நீதான் கண்டு பிடிக்க முடியாதபடிக்கு மறைந்திருந்தாய். ஆகவே ஒளிந்து கொள்ளும் விளையாட்டுக்கு உனக்கே முதல் பரிசு!'' என்று தன் முடிவைத் தெரிவித்தது நரி.

''மல்லாந்து போய் மறைந்திருக்க வேண்டும் என்று தோன்றியதே உனக்கு. நீ புத்திசாலிதான். உன் உடலின் அடிப்பாகம் பாறையைப் போலவே இருக்கிறது'' என்று பாராட்டியது ஆந்தை.

ஆமைக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி, பெருமையான பெருமை !

''நேராக இருப்பதைவிட மல்லாந்து கிடக்கும்போதுதான் எனக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது!'' என்றது.





பேராசைக்காரனின் ஆடு

முன்னொரு காலத்தில் ஒரு மனிதன் இருந்தான். அவன் பெயர் அஸ் அப். மகா கஞ்சனான அவன் பெரும் பேராசைக்காரனாகவும் இருந்தான். யாராவது எதற்காகவாவது தம் சட்டைப் பைக்குள் கையை விடுவதைக் கண்டானானால் 'எனக்குப் பொருள் தரத்தான் அவர் தம் பைக்குள் கைவிடுகிறார்' என்று நினைப்பான் அஸ் அப். ஏதாவதொரு பிரேத ஊர்வலம் போகுமானால் 'இறந்துவிட்ட இவர் எனக்கு ஏதாவது சொத்து எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கக்கூடாதா?' என்று எண்ணுவான். யார் வீட்டிலாவது கல்யாணம் என்றால் தன் வீட்டை அலங்கரித்து வைத்துத் தயாராக வாசலில் காத்திருப்பான். தப்பித் தவறி மணமகன் தன் வீட்டுக்குள் வரமாட்டானா, வந்தவன் ஏதாவது தனக்கு அன்பளிப்புக் கொடுக்கமாட்டானா என்ற நப்பாசைதான் அந்தப் பேராசைக்காரனுக்கு.

இப்படி எதைக் கண்டாலும் அது தனக்குக் கிடைக்க வேண்டும், தன்னுடையதாக வேண்டும் என்று பேராசைப்படுகிறவன் அஸ் அப். இவனை விடப் பேராசைக்காரர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று மக்கள் பேசிக் கொள்ளுவார்கள். ஒருவர் இதை அந்தப் பேராசைக்காரனிடமே கேட்டு நிச்சயப்படுத்திக் கொள்ள நினைத்தார். ''உன்னைவிட அதிக ஆசைப்படுபவர்கள் யாராவது இருப்பார்களா?'' என்று ஒருநாள் அவனிடமே அவர் கேட்டுவிட்டார்.


இதற்கு அஸ் அப் புன்முறுவலுடன் கூறினான்: ''நான் ஆடு வளர்த்து வந்தேன். அது எங்கேயாவது ஓடிப் போய் விடப் போகிறதே என்று அதை என் வீட்டின் மொட்டை மாடியில் வைத்திருந்தேன். தினமும் அதற்கு அங்கேயே பசுமையான இலைகளையும் புல்லையும் பொன்னிறமான வைக்கோலையும் கொண்டு போய்ப் போடுவேன். ஒரு நாள் வானத்திலே வான வில் தோன்றியது. அதைக் கண்ட என் ஆடு, ''ஆஹா, எத்தனை வண்ண வண்ணமான உணவுப் பொருள்கள்? என் எஜமானர் எனக்கு இரண்டு வண்ணங்களில்தானே உணவு கொண்டு வந்து தருகிறார். அங்கே பல நிறங்களில் யாரோ அத்தனை புல், வைக்கோல், இலை தழைகளைக் கட்டிவைத்திருக்கிறார்களே? அதைத் தின்று ருசித்து மகிழ்வோம் என்று வானவில்லை எட்டிப் பிடிப்பதற்காக மாடியிலிருந்தபடியே தாவியது. அதனால் கீழே விழுந்து இறந்து போயிற்று. இப்போது உங்கள் வினாவுக்கு விடை கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.''

''நிச்சயமாக உன் ஆடு உன்னையும் விடப் பேராசை பிடித்த பிராணிதான். சந்தேகமேயில்லை'' என்றார் அஸ் அப்பிடம் கேள்விகள் கேட்டவர்.

இன்றைக்கும் பெரும் பேராசைக்காரனை 'அஸ் அப்பின் ஆடு' என்று குறிப்பிடுவது அரபு நாட்டில் வழக்கமாக இருக்கிறது.

பிலால்.

ஆதாரம்: பிறை





சூயிங்கம்

"அம்மா! நான் இன்னிக்கு ஸ்கூலுக்குப் போகமாட்டேன்'' என்று ராஜு தன் புத்தகப் பையைக் கீழே போட்டுவிட்டுச் சோபாவில் அமர்ந்தான். ''ஏண்டா, இன்னிக்கு ஸ்கூலுக்குப் போக மாட்டே?... இதோ பார், நீ இப்ப ஸ்கூலுக்குப் போனு இன்னிக்குச் சாயந்திரமே ஒரு கிரிக்கெட் பாட் வாங்கித் தருவேன்'' என்று சமாதானப் படுத்தினுள் அவள் அம்மா. ''எனக்குப் பேட்டும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்'' என்று தன் முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டான் ராஜு. அவனுடைய அம்மா அவனை அடிப்பதற்குள், அப்பா ஒரு நாலணுவை அவனிடம் கொடுத்து, ''இந்த நாலணுவுக்குச் சூயிங்கம் வாங்கிண்டு, ஒழுங்கா ஸ்கூலுக்குப் போடா கண்ணு'' என்று கூறினுர். அவ்வளவுதான். 'உ'ம்மென்றிருந்த முகத்தில் உவகை உதயமானது. ''தாங்க்ஸ் அப்பா'' என்று மகிழ்ச்சியுடன் கூவிக் கொண்டே பையுடன் ஸ்கூலுக்குக் கிளம்பினுன்.


ராஜுவை மட்டுமல்ல. உலகில் இருக்கும் கோடிக் கணக்கான குழந்தைகளைக் கவர்ந்த அந்தச் சூயிங்கம் தோன்றிய வரலாறும் அதைப் போலவே மிகவும் ருசிகரமானது.

சூயிங்-கம் தோன்றிய வரலாறு

சூயிங்—கம் (Chewing gum) என்பது மென்று சுவைக்கக் கூடிய ஆனுல் விழுங்கக் கூடாத ஓர் இனிப்புப் பண்டமாகும். இவ்வினிப்புப் பண்டம் முதன் முதலில் கிரேக்க நாட்டிலும், பின்பு 1900-ம் ஆண்டு அமெரிக்காவிலும் தோன்றியது. தோன்றிய சிறிது காலத்திலே அமெரிக்காவில் முக்கிய வியாபாரப் பொருளாக மாறி, மிகக் குறுகிய கால கட்டத்திலேயே உலகில் எழுபத்தியொரு நாடுகளில் பிரபலமானது. இது வெப்பமண்டல மழைக் காடுகளில் வளரும் ஒருவகை மரத்தின் இரப்பர் பால் சேர்ந்த கலவையால் ஆனது. மேலும் இக்கலவையில் மெக்ஸிகோ நாட்டில் காணப்படும் சப்போடில்லா (Suppodilla) மரத்தின் பாலும், பெரு நாட்டில் வளரும் லெகஸ்பி (Lechespi) நிகாராகுவா நாட்டில் காணப்படும் டுனு (Tunu) மலேயா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் காணப்படும் ஜெலுடங் (Jelutung) ஆகிய மரங்களின் பாலும் இடம் பெற்றுள்ளன. மேலும் பல செயற்கை முறையில் தயாரான கரையாத பிசினேயும், மெழுகையும் இக்கலவையோடு சேர்க்கிருர்கள். ஏனெனில் இப்பிசினும் மெழுகும் மேலும் இதற்கு அதிக இழுபடும் சக்தியை அளிக்கின்றன.

சூயிங்-கம் செய்யப்படும் விதம்


இப்பண்டம் தயாராவதற்குத் தேவையான மரப் பால்களை அந்தந்த மரப் பட்டைகளைப் பிளந்து, பின்பு அந்த இடத்திலிருந்து கசியும் பாலைச் சிறிய குவளைகளின் மூலம் சேகரித்து, சேகரித்ததை யெல்லாம் ஒரு பெரிய கொள் கலத்தில் கொட்டித் தொழிற்சாலைக்கு வண்டியின் மூலம் எடுத்துச் செல்கிருர்கள். அங்கே பலவகையான மரப் பால்கள் சேர்ந்த கலவை நன்கு கொதிக்க வைக்கப்பட்டு, பின்பு சிறிது கெட்டியானதும், அச்சுக்களில் வார்க்கப்படுகிறது. அச்சுக்களில் வார்க்கப் பட்ட பக்குவமான மரப் பால்களின் கலவை, இயந்திரங்களின் மூலம் சுத்தம் செய்யப்பட்டு, சர்க்கரை, ஒருவகை மாவு, சோளக் கூழ் ஆகியவை கலக்கப் படுகிறது. பின் கனச் செவ்வகமான குச்சிகளின் மூலம் அக்கலவை தட்டை



யாகச் செய்யப்பட்டு, அதன் மேல் இனிப்புச் சுவையோ, பழச் சுவையோ, இல்லை வேறு எந்தச் சுவையோ மேற்புறத்தில் பூச்சாகப் பூசப்பட்டு, பேப்பரில் சுற்றிக் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது.

சூயிங்கத்தின் பயன்கள்

பலர் சூயிங் - கத்தைச் சுவைப்பதால் வியாதிகள் வரும் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அது முற்றிலும் தவறு. அதன் இயல்பை ஆராய்ந்த விஞ்ஞானிகள் இதைச் சுவைத்தவர்களுக்கு இது நற்பலன்களை நல்குகிறது என்று கண்டறிந்தனர். சூயிங்-கத்தைச் சுவைத்தவர்களுக்கு, முதன் முதலில் இன்பமும், சுவையும் கிடைக்கிறது. நிறைய உணவு உண்டபின் சூயிங்கத்தை மென்றால் உண்ட உணவு எளிதில் ஜீரணமாக வழி செய்கிறது. இவ்வினிப்புப் பண்டம் எளிதில் கோப உணர்ச்சி அடைபவர்களின் கோபத்தைத் தணிக்கிறது என்று மன இயல் வல்லுனர்கள் கூறியிருக்கின்றனர். இது கடினமான வேலை செய்வோரின் களைப்பையும் சோர்வையும் அகற்றுகிறது என்று கொலம்பியா பல்கலைக் கழகத்தில் வெளியான அறிக்கை தெரிவிக்கிறது.



" பவுன் விற்கிற விலையில் உன் கழுத்துக்கு நெக்லேஸ் கேட்கிறாயே! அத்தனை பணத்துக்கு நான் எங்கே போவேன் ?"

நம் நாட்டில் பெங்களூரில் சூயிங்கம் செய்யும் தொழிற்சாலை உள்ளது.

- அழகு விஸ்வம்

பிறர் துன்பம் கண்டு துடித்தவர்

கிருஷ்ணவேணி



ஒரு பெரிய மாதா கோயில், கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. அதை அடைய வரிசையாகப் பல படிகள். மாதா கோயிலினுள்ளிருந்து சில போர் வீரர்கள் பலவந்தமாக இரண்டுபேரை இழுத்துக் கொண்டு வெளியே வருகிறார்கள். அவ்விருவரையும் சர்ச்சின் படிகளில் உருட்டிக் கீழே தள்ளிவிட முயற்சி செய்கிறார்கள். ஒரே கூச்சல். கோபமான பேச்சுக்கள்...அப்போது....

''நிறுத்துங்கள், நிறுத்துங்கள்! எல்லாரும் நம் சகோதரர்களே'' என்று சொல்லியபடியே ஓடி வந்தார் ஓர் இளைஞர். அவருடைய வெள்ளை ஆடை அழுக்குப் படிந்து நாசமாகி யிருந்தது.

அவருடைய பெயர் **ஹென்றி ட்யூனன்ட் (Henry Dunant)** ஸ்விட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு தொழிலதிபரின் மகன். சர்ச்சுக்குள் இருந்தவர்கள் காயமுற்ற வீரர்கள். பிரான்ஸ், இத்தாலி நாடுகளைச் சேர்ந்தவர்கள், அவர்கள் காயமடைவானேன்? காரணமிருந்தது. ஆஸ்திரியா தேசம் இத்தாலி நாட்டினுள் ஆக்கிரமிப்புச் செய்திருந்தது. அவர்களை விரட்டி அடிக்க பிரான்ஸின் உதவியை வேண்டியது இத்தாலி. அப்போது பிரான்ஸின் மன்னராக இருந்தவர் மூன்றாவது நெப்போலியன். இத்தாலியின் உதவிக்குத் தம் படைகளுடன் வந்திருந்தார். **ஸால் ஃபெர்னோ** என்னுமிடத்தில் நிகழ்ந்த போரில் காயமுற்றவர்களுக்கு அந்த மாதா கோயில் அடைக்கலம் அளித்திருந்தது. தங்களிடையே விரோதிகளான இரு ஆஸ்திரியப் போர் வீரர்களைக் கண்டதும் இத்தாலி, பிரான்ஸ் நாட்டு வீரர்களுக்கு ஒரே ஆத்திரம். அவ்விருவரையும் தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்தார்கள், வெளியே தள்ளி உருட்டிவிட. அப்போதுதான் ஹென்றி ட்யூனன்ட் அங்கு வந்தார். அவர் தடுத்திராவிட்டால் பாவம், ஆஸ்திரிய வீரர்களின் பாடு மோசமாகி யிருக்கும்.

அது சரி, ட்யூனன்ட் அங்கு எதற்காக வந்தார்?

தொழிலதிபரின் மகன் என்று சொன்னேனல்லவா? அல்ஜீரியாவில் உள்ள அவரது தானியக் கம்பெனி சரியாகச் செயல்படவில்லை. அல்ஜீரியா பிரான்ஸ் வசமுள்ள நாடு. ஆகவே அந்த வியாபார விஷயமாக மன்னர் நெப்போலியனைக் காண விரும்பினார் ட்யூனன்ட். அவரோ அப்போது இத்தாலியர்களுக்காகப் போரிட்டுக்கொண்டிருந்தார். ட்யூனன்ட் ரொம்பப் படித்தவர். நல்ல இதயம் படைத்தவர். அப்போது அவருக்கு

வயது முப்பத்து ஒன்றுதான். அவர் மன்னரைப் பேட்டி காண இத்தாலிக்கு வந்தபோது மன்னரின் படைகள் இத்தாலியில் உள்ள சிறிய கிராமமான ஸால் ஃபெர்னோவை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகக் கேள்விப் பட்டார். ஆகவே அருகிலிருந்த **காஸ்டி கிளியோன்** நகருக்குப் போனார். அழகான வெள்ளை ஆடைகளை அணிந்து கொண்டு மன்னரைக் காணத் தயாரானார்.


ஆனால்... மன்னரைப் பேட்டி காண வேண்டுமென்ற ஆவலெல்லாம், அந் நகருக்குச் சாரி சாரியாக வந்துகொண்டிருந்த காயமடைந்த போர் வீரர்களைக் கண்டபோது பறந்தோடி விட்டது. காஸ்டி கிளியோன் நகரில் உயர்ந்ததோர் இடத்தில் ஏறி நின்று பார்த்தார் ட்யுனன்ட். ஸால் ஃபெர்னோவின் யுத்த களத்தைத் துல்லியமாகக் காண முடிந்தது. துப்பாக்கிகளும் பீரங்கிகளும் மூர்க்கமாக மோதிக் கொண்டிருந்தன. பீரங்கிகள் கக்கிய நெருப்புப் புகையினூடே குதிரை வீரர்கள் வாளேந்தி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். எப்படி? இறந்து, காயமடைந்து கிடந்த போர் வீரர்களின் உடல்களின் மீதாக! ஸால் ஃபெர்னோ போர்க்களத்தில் உயிர்களைப் பலிகொள்ளும் புதிய ஆயுதம் பயன்படுத்தப்பட்டது. யந்திரத் துப்பாக்கி - இதுவரை எந்தப் போர்க் களத்திலும் பயன்படுத்தப்படாத புதிய ஆயுதம் அது. மிஷின் கன் — ஏராளமான மனித உயிர்களை வெகு விரைவில் கொன்று குவித்துக் கொண்டிருந்தது. இந்தக் காட்சிகளைக் கண்ட ட்யுனன்டுக்குத் தாம் வந்த காரியம் மறந்தே போயிற்று.

அன்று பிற்பகல் (ஜூன் 24ந் தேதி) பிரெஞ்சு இத்தாலியப் படைகள் ஆஸ்திரியர்களின் படையணியைப் பிளந்து விட்டார்கள். பின்வாங்கி ஓடும் ஆஸ்திரியப் படைகளை நோக்கி இவர்களின் பீரங்கிகள் திருப்பப்பட்டன.

மறுநாள் காலை ட்யுனன்ட் ஸால் ஃபெர்னோவுக்குப் போனார். அந்தக் கிராமத்துச் சாலைகள் மனித உடல்களால் மூடிக் கிடந்தன. உயிர் ஊசலாடிக் கொண்டிருப்போரிடமிருந்து முக்கலும் முனகலும் 'உதவி, உதவி' என்ற ஓலமும் கேட்டுக் கொண்டிருந்தன. தன்னால் முடிந்தவரை ஊனமுற்றோருக்கு உதவினார் ட்யுனன்ட். காயமடைந்தவர்களை காஸ்டி கிளியோன் நகருக்கு அனுப்பி வைத்தார். அந்த நகரத்தில் வைத்திய சாலை, மாதா கோயில், பொது இடங்கள் அத்தனையும் நிரம்பி விட்டன. காயமுற்ற அத்தனை பேருக்கும் அந்நகரத்தில் போதுமான இடமில்லை. இத்தாலி நாட்டின் பொசுக்கும் சூரிய வெப்பத்தில் தெரு ஓரங்களில் எல்லாம் போர் வீரர்கள் கிடந்தார்கள். தாங்க முடியாத வேதனையை அனுபவித்துக் கொண்டு, ட்யுனன்ட் அந்த நகரில் ஒரு வாரம் தங்கியிருந்தார். ஓய்வின்றி, உணவின்றி, உறக்கமின்றிக் காயம்பட்ட போர் வீரர்களுக்கு ஓடியோடி உதவினார். இவரது தன்னல மற்ற, மனிதாபிமானமிக்க சேவையைக் கண்ட பலரும் இவருக்கு உதவியாக உழைக்கலானார்கள். அவர்களுக்கு இவர் பெயர் தெரியாது. அதனால் இவரை 'வெள்ளை ஆடை மனிதர்' (The man in white) என்றே அழைத்தார்கள்.

ட்யுனன்ட் இத்தாலியிலிருந்து திரும்பியபின் வெகுநாள் வரை அவரது மனத்திரையில் அங்கு கண்ட காட்சிகள் சுழன்று கொண்டிருந்தன. அநாதரவாகக் கிடந்த அந்தப் போர் வீரர்களின் அவலக் குரல் அவர் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. மறக்க முடியாத அந்தக் காட்சிகளை அப்படியே உருக்கமான வார்த்தைகளில் வடித்தார். 'ஸால் ஃபெர்னோவின் நினைவுகள்' என்ற புத்தகமாக உருப்பெற்றது அது? இதை எழுத மூன்று ஆண்டுகள் பிடித்தது ட்யுனன்டுக்கு. தம் சொந்தச் செலவிலேயே அதை வெளியிட்டார். முதல் பதிப்பு வெளியானவுடனேயே விற்றுத் தீர்ந்து விட்டது. மறு பதிப்புக்கள் தொடர்ந்தன. அதுமட்டுமல்ல. அதை மற்ற ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட்டார்கள். அதைப் படித்தவர்களின் உள்ளம் நெகிழ்ந்தது. மனச்சாட்சி உறுத்தியது. போர்க் களத்தில் காயமுற்ற வீரர்களின் நலனுக்கு ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்று மக்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

1863ல் பதினாறு தேசங்களின் பிரதிநிதிகள் இதற்காக ஜெனீவாவில் கூடினார்கள். இதற்கு முதல் ஜெனீவா மகாநாடு (First Geneva Convention) என்று பெயர். யுத்த காலத்தில் காயமுற்றவர்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கு மனிதாபிமான மிக்க விதிமுறைகளை வகுத்தார்கள் காயமுற்றோருக்கு உதவி யளிக்கும் டாக்டர்கள், நர்ஸ்கள், மக்கள் ஆகியோர் நடுநிலையாளர்களாகக் கருதப்பட வேண்டும். ஆகவே தம்மை இனம் காட்ட அவர்கள் ஜெனீவா சிலுவை (Geneva Cross)யை அணிந்து கொள்ள வேண்டும் என்று



முடிவாயிற்று. ஜெனீவா சிலுவை என்றால் என்ன?

ஸ்விட்ஜர்லாந்தின் கொடி சிவப்புப் பின்புலனின் நடுவில் வெள்ளைச் சிலுவை. இதை அப்படியே மாற்றி வெள்ளைப் பின்புலனின் நடுவில் சிவப்புச் சிலுவைக் குறியை உருவாக்கினார்கள். ஆம், **செஞ்சிலுவைச் சங்கம்** தோன்றியது இப்படித்தான்! வைத்திய உதவியோடு செல்லும் கப்பல்கள், ரயில் வண்டிகள், மற்ற வாகனங்கள் எல்லாம் இக்குறியைத் தாங்கிச் செல்லும். போர் வீரர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வைத்திய சாலைகளிலும் இக்குறி பதிக்கப்பட்டிருக்கும். இந்தக் குறியைக் கண்டால் அதை — அவர்களை — எந்தத் தரப்பினரும் தாக்கக் கூடாது. இப்படி ஒரு சர்வ தேச உடன்பாட்டுக்கு வந்தார்கள்.

முஸ்லிம் அரசுகள் சிலுவைக் குறிக்குப் பதில் பிறைச் சந்திரனைப் பொறித்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டனர். பாரசீகம் சிவப்புச் சிங்கத்தையும் சூரியனையும் சிலுவைக்குப் பதில் பயன்படுத்தின. குறிகள் மாறுபட்டாலும் துன்பப் படுவோர் எங்கிருந்தாலும் யாரானாலும் அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற குறிக்கோளில் மாறுதல் கிடையாது.

சின்ன வயதில் ட்யுனன்ட் கைதிகளைக் கண்டால் கண்ணீர் வடிப்பார். ஆகவே இப்போது அவர் இந்த ஒப்பந்தத்தில் யுத்தக் கைதிகளைப் பராமரிக்கத் தக்க விதமாகச் சில ஷரத்துக்களையும் சேர்க்கப் பாடுபட்டார். நீண்ட நாட்களுக்குப் பிறகு இவருடைய இந்த நோக்கம் நிறைவேறியது. ஆனால் அதைக் காண அவர் உயிரோடு இல்லை. முதல் இரண்டு உலகப் போர்களில் ட்யுனன்டின் இந்தக் கைதிகள் பாதுகாப்புச் சட்டம் போர்க் கைதிகளுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருந்தது என்பதைத் துன்பப் பட்ட மக்கள் அறிவார்கள். போர்க் கைதிகள் உடலாலும் உள்ளத்தாலும் ஆரோக்கியமானவர்களாக வாழுவதற்கு ஏற்ற வகையில் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டவர் ட்யுனன்ட். சமாதானத்துக்கான முதல் நோபல் பரிசை 1901ல் இவருக்கு வழங்கிக் கௌரவித்தார்கள்.

முதல் ஜெனீவா மகாநாடு 1863ல் கூடி ஒரு முடிவுக்கு வந்தாலும் வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களோடு செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கப்பட்டது 1870ம் ஆண்டுதான். அன்றுமுதல் ஒவ்வொரு யுத்த களத்திலும் அது உலகின் எந்த மூலையில் இருந்தாலும் செஞ்சிலுவைச் சங்கம் ஓடிப்போய் உதவி செய்து வருகிறது.

இன்று இச்சங்கம் யுத்த காலத்தில் மட்டுமல்லாமல் சமாதான காலங்களிலும் மக்களுக்குச் சேவை செய்கிறது. உலக மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கும், நோய்களை ஒழிக்கவும், பஞ்சம், வெள்ளம், புயல், பூகம்பம் முதலிய இயற்கையின் சீற்றங்களுக்கு ஆளான மக்களின் துன்பம் துடைப்பதற்கும் இச்சங்கம் பாடுபடுகிறது. செஞ்சிலுவைச் சங்கம் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு வருகிறது. அதே போல் இச்சங்கத்தின் பணிகளும் பல்வேறு இடங்களில் பர்ந்து பரவி வருகின்றன.

ஜூனியர் ரெட் கிராஸ் — இளையவர்களின் செஞ்சிலுவைச் சங்கம் என்ற அமைப்பில் பிறருக்கு உதவப் புலவிதங்களில் சிறுவர், சிறுமியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. முதல் உதவி, குழந்தைப் பராமரிப்பு இப்படிச் சிறு சிறு பணிகளை — அதாவது எவ்வகையிலாவது பிறருக்கு உதவ வேண்டும் என்ற கொள்கை போதிக்கப்படுகிறது. உலகில் உள்ள பல்வேறு தேசங்களிலுமாக இன்று ஜூனியர் ரெட் கிராஸ் அமைப்பில் 50,000,000 குழந்தைகள் அங்கம் வகித்துப் பணியாற்றுகிறார்கள் என்பது உங்களுக்கெல்லாம் பெருமை இல்லையா?



பரிசு

ஒரு நாள் ஹலரத் இப்ராஹீமுப்னு அத்ஹம் என்ற ஆத்ம ஞானியார் ஒரு தெரு வழியே போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு மனிதன் நன்றாகக் குடித்துவிட்டுப் போதையிலே தன்னை மறந்தவனாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தான். இடையிடையே 'அல்லா—அல்லா' என்றும் முனகினான்.

இறைவனின் தூய நாமத்தைக் குடியினால் அசுத்தமடைந்த வாயினால் சொல்லுகிறானே என்று வேதனை அடைந்த அம்மெஞ்ஞானி தண்ணீர்

குரங்கு : இது ஆப்புப் பிடுங்கின கதையில்லே!

நாரை : நான் நிஜமாகவே ரொம்பப் பெரிய பறவைதான்.

மான் : இனிது இனிது ஏகாந்தம் இனிது!







கொண்டு வந்து அவனுடைய வாயைக் கழுவிச் சுத்தப்படுத்தினார்கள். அப்படியும் அவன் போதை தெளியவில்லை. இப்படியே இரண்டு மூன்று முறை அவன் வாயைக் கழுவிவிட்டுத் தம் வழியே சென்றார்கள்.

சற்றைக்கெல்லாம் அம்மனிதனுக்குப் போதை தெளிந்தது. அப்போது அவன் அருகே நின்று கொண்டிருந்தவர்கள், அவன் குடி போதையில் அல்லாவின் பெயரைக் கூறி முனகியதையும் அப்போது அரசு துறந்த ஆத்ம ஞானியாரான ஹஸரத் இப்ராஹீமுப்னு அவனுடைய வாயைக் கழுவிச் சுத்தம் செய்ததையும் அவனிடம் கூறினார்கள்.

இதைக் கேட்டதும் அம்மனிதனை வெட்கமும் வேதனையும் சூழ்ந்து கொண்டன. அந்த விநாடியே இனி எப்போதும் குடிப்பதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டான்.

அன்றிரவு......

இறைவன், ஞானியின் கனவில் தோன்றி, ''அன்பனே! எனக்காக அந்தக் குடிகாரனின் வாயைச் சுத்தப் படுத்தினாய்; உனக்காக நாம் அவனுடைய இதயத்தைச் சுத்தப்படுத்தி விட்டோம்!'' என்று அறிவித்தார்.

எம். ஏ.

நன்றி-பிறை

கரடி : என்னடா இவன் கொம்பு மேலே ஏறிக்கிட்டானேன்னு பாக்கறீங்களா?

புலி: திக்குத் தெரிந்த காட்டில்....!

புகைப் படங்கள் :

எல்விஸ். ஆர். டங்கன்







பறக்க முடியாத

உலகிலுள்ள ஜீவராசிகள் உயிர் வாழ்வதற்கான உணவைத் தேடிக் கொள்ளத் தங்கள் கைகளையோ, இறக்கைகளையோ, செதிள் துடுப்புக்களையோ நம்பி வாழுகின்றன. ஆனால் இவைகளை நீண்ட நாள் பயன்படுத்தாமல் இருக்குமானால் இவை செயலற்றுப் போகும். இதற்கு உதாரணம் தான் பறக்க முடியாத பறவைகள். ஒரு காலத்தில் கானகங்களில் பறந்து திரிந்த இப்பறவைகள் இன்று தங்கள் வாழ்வைத் தரையிலேயே கழிக்கின்றன, பறக்கும் திறன் பட்டுப் போய்விட்ட நிலையில். ஒரு பறவை பறப்பதற்கு—அதற்கான தசை அமைப்பு, எலும்புகள், இறக்கைகளின் நீளம் ஆகியவை மட்டுமே போதாது. பறக்க வேண்டும் என்ற முயற்சியும், அதற்குத் தேவையும் அந்தப் பறவைக்கு இருக்க வேண்டும். பறக்கும் தேவை இல்லாதபோது முயற்சி ஏற்படுவதில்லை. காரணம் நிலத்திலேயே தேவையான உணவு கிடைக்கிறது. அபாயம் ஏதுமில்லை. இதனால் பறந்து சென்றுதான் உணவு தேட வேண்டும், விரோதிகளிடமிருந்து தப்பிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாமல் போகவே பறக்கும் சக்தி தேய்ந்து குறைந்து முடிவில் அழிந்தே விடுகிறது. உடல் அமைப்பிலும் அதற்கேற்ற மாறுதல்கள் ஏற்பட்டு விடுகின்றன. மறுபடியும் அவை பழைய பறக்கும் சக்தியைப் பெறுவதே இல்லை.

கீல் (Keel) எனப்படும் மார்பு எலும்புதான் பறவைகளின் பறக்கும் சக்திக்கு ஆதாரம். இத்துடன் பறப்பதற்கு ஏற்ற தசைநார்கள் இணைக்கப்பட்டிருக்கும். பறக்கும் செயலைப் பயன்படுத்தாத பறவைகளுக்கு இந்த உறுப்புக்கள் முழுமையாக மறைந்தே விடுகின்றன. இதை ஈடு செய்யும் வகையில் இந்தப்பறவைக்கு மற்றப் பறவைகளை விடப் பலம் பொருந்திய கால்கள் ஏற்படுகின்றன.


நியூஸிலாந்தில் உள்ள ராட்சச மோ (Giant Mao) என்னும் பறவை ஒரு காலத்தில் பறந்து கொண்டிருந்தது, தன்னுடைய எழுநூறு பவுண்டு எடையுள்ள உடலைத் தூக்கிக் கொண்டு, பல நூற்றாண்டுகளுக்கு முன்னால். பின்னர் இது பாதுகாப்பான தனது தீவு இருக்கையில், பறப்பதைக் கைவிட்ட நிலையில் வாழ்ந்த போது இதன் இறக்கைகள் பறக்கும் சக்தி இழந்து இறகுகள் மூடிய குச்சிகளாகி விட்டன. இன்று

பறவைகள்!

இந்தப் பறவை இனமே அழிந்தும் விட்டது. இதன் உயரம் 12 அடிகள். இத்தீவின் பழங்குடி மக்கள் இப்பறவையை வேட்டையாடி வந்தனர். பதினான்காம் நூற்றாண்டில் மோரி இனத்தவர் இத்தீவுக்கு வந்தபோதே இப்பறவைகள் வெகுவாகக் குறைந்துவிட்டன. ஐரோப்பியர்கள் இங்கு பதினெட்டாம் நூற்றாண்டில் முதன் முதலில் அடியெடுத்து வைத்தபோது ஒரு சில மோக்கள் மட்டுமே காணப்பட்டன. இன்று இதன் படத்தைத்தான் பார்க்கலாமே தவிர பறவையை உயிருடன் காண முடியாது. மிகப் பெரிய உடல் அமைப்புக் கொண்ட மோ இனமே அழிந்துவிட்டது.

ராட்சஸ மோ — பறவையின் வழித்தோன்றலே போல் நியூஸிலாந்தின் தேசியச் சின்னமாக விளங்கும் ஒரு பறவையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? இதுதான் **கிவி** (Kiwi). இதனாலும் பறக்க முடியாது. பெரிய கோழியின் அளவே இருக்கும் இப்பறவையின் கெட்டியான இறக்கைகள், நீண்ட ரோமம் போன்ற வாலுக்கடியில் மறைந்திருக்கும். பெரிய உறுதியான கால்கள். இது ஓடும்போது வினோதமாக இருக்கும். இதன் மூக்கில் துவாரம் இருப்பதால் வாசனையை நுகரும் சக்தியும் இதற்கு உண்டு. ஒருசில பறவைகளுக்குத்தான் இந்த அபூர்வ சக்தி உண்டு. பறக்க முடியாத பறவைகளில் ஆண்கள்தான் அநேகமாக முட்டையை அடை காக்கும். கிவியும் இதற்கு விதிவிலக்கல்ல.

கிவியின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்து விட்டது. கானகங்களை அழிப்பதும் வேட்டையாடுவதுமே இத்தகைய பறவைகளின் அழிவுக்குக் காரணம். ஆனால் அரசாங்கம் கிவிக்களைக் கொல்வதைத் தடை செய்து சட்டம் இயற்றியிருப்பதால் இதன் அழிவு தடுக்கப்பட்டுள்ளது. வடக்கு ஆஸ்திரேலியா, நியூகினி ஆகிய பிரதேசங்களில் **காஸோவாரி** (Cassowary) என்றொரு பறவை. இதனாலும் பறக்க முடியாது. சண்டையிடும் குணத்தினாலேயே இது தன் பறக்கும் தன்மையை இழந்து விட்டது. உருவத்தில் மிகப் பெரிய பறவை இது. உறுதியான கால்களினால் எதிரியைத் தாக்கும். இதன் கால்களில் உள்ள உள் விரல்களில் கூரான நகங்கள் வேறு இருக்கும். கெட்டியான எலும்பு போன்ற கொண்டை இதன் தலைக்குப் பாதுகாப்பளிக்கிறது. பயன்படாத இற









குகள், முரட்டு ரோமம் போன்ற வால் பக்கத்தோடு இணைந்திருக்கும். இந்த நீண்ட வால் இறகுகள் உடலின் பக்க வாட்டில் வளைந்து அடிப்பக்கத்தில் முட்களைப் போல் வளர்ந்துள்ள இறகுகளைப் பாதுகாக்கிறது. அடர்ந்த புதர்களினிடையே கூட இது வெகு வேகமாகச் செல்லக் கூடியது. நன்றாக நீந்தவும் தெரியும் இதற்கு.

தலை, கழுத்து இவைகளில் ரோமம் இருக்காது. வான்கோழிக்கு இருப்பது போல் சிவப்பான சதை இருக்கும். அசைப்பில் வான்கோழி போலவே இருந்தாலும் இது ரொம்பச் சண்டைக் குணம் படைத்தது. விரைவில் ஆத்திரமடையக் கூடியது. கோபமடைந்த காஸோவாரியிடமிருந்து தப்ப வேண்டுமானால் ஒரே வழி மரத்தின்மீது ஏறிக் கொண்டுவிட வேண்டும்!

ஆஸ்திரேலிய காஸோவாரிக்கு முற்றிலும் மாறுபட்ட குணமுடையது **பென்னெட் காஸோவாரி** என்ற பறவை. இதனாலும் பறக்க முடியாது. குட்டையான குண்டான பறவை. ரொம்பவும் சங்கோஜமுள்ள பறவை இது. வேகமாக ஓடக் கூடியது. சாதாரணமாக பிடிபடாது. குஞ்சாக இருக்கும்போதே எடுத்து வளர்த்தால்தான் பழக்க முடியும்.


தென் அமெரிக்காவில் காணப்படும் **ரீயா (Rhea)** என்ற பறவையும் பறக்க முடியாத வகையைச் சேர்ந்ததுதான். இதற்கு நீண்ட இறகுகள் உண்டு. விரோதிகளிடமிருந்து வேகமாக ஓடித் தப்ப இதன் இறகு பயன்படுகிறது. ஆரம்பத்தில் இப்பறவை பிரேஸில், அர்ஜென்டினா ஆகிய நாடுகளிலுள்ள புல்வெளிகளில் மந்தை மந்தையாகக் காணப் பட்டன. நாகரிக வளர்ச்சி காரணமாக இவை இங்கிருந்து விரட்டப்பட்டன. உணவுக்காகவும், விளையாட்டுக்காகவும் இவைகளைப் பெருமளவில் வேட்டையாடி அழித்துவிட்டார்கள். இப்பறவைகள் நாலடியிலிருந்து ஐந்தடி உயரம் வரை இருக்கும். ஓர் ஆண் பறவைக்கு ஆறு மனைவிகள் வரை உண்டு. அவைகளின் முட்டைகளை அடை காக்கும் பணியையும் ஆண்களே செய்கின்றன.

ஆண்டீஸ் பகுதியின் கிழக்குப் பகுதியில் 'மினி' ரீயாக்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கும் **டார்வினுடைய ரீயா (Rhea)** என்று பெயர். உருவத்தில் சிறியதானாலும் ஒரு குதிரையையும் அதில் சவாரி செய்பவரையும் தாக்கு மளவுக்குப் பலம் பொருந்தியது.

ஆஸ்திரேலியாவில் வாழும் **எமு** என்ற பறவையின் வால் இறகு ரீயாவினுடையதைப் போலவே யிருக்கும். மிகச் சிறிய பயனற்ற இறகுகளும் உண்டு. எமுக்கள் வெகு வேகமாக ஓடக்கூடியவை. இதன் விரல்களிடையே ஜவ்வுத் தோல் இல்லா விட்டாலும் காஸாவாரியைப் போல நீந்தவும் செய்யும். பறக்க முடியாத பறவைகளுள் மிகப் பெரியதும் உயிர் வாழும் பறவை இனங்களில் மிகப் பெரியதுமான **நெருப்புக் கோழியைப்** பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே. நெருப்புக் கோழியின் உயரம் எட்டு அடி. நிறை இருநூறிலிருந்து முந்நூறு பவுண்டு வரை. இதன் அழகிய இறகுகளுக்காகவும் ருசியான இறைச்சிக்காகவும் இப்பறவையை ஏராளமாக வேட்டையாடி விட்டார்கள். தன்னிச்சையாக வாழும் நெருப்புக் கோழியைக் காண்பது அரிது. சரணாலயங்களில் மட்டுமே இன்று இவைகளைக் காண முடிகிறது.

இந்தப் பெரிய பறக்காத பறவைகளைத் தவிர வேறு சில வகை வாத்துக்களும், நீர்வாழ் பறவைகளும் இப்படிப் பறக்கும் பழக்கத்தை மறந்தவைகளாக இருக்கின்றன. பறப்பதினால்தான் பறவைகள் என்கிறோம். பறக்காத இவைகளை எப்படி அழைப்பது?


காலமும் வேலையும்!



☐ ஒரு கண்ட்ராக்டர் ஐம்பது மைலுக்கு நெடுஞ்சாலையை ஒரு வருஷத்தில் போட்டுத் தருவதாக ஒப்பந்தம் பேசி 225 மனிதர்களை வேலைக்கு அமர்த்தினார். ஏழு மாத முடிவில் இருபத்தொரு மைல்களுக்கான சாலைதான் போட்டு முடிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட கால கெடுவுக்குள் ஒப்பந்தப்படியான சாலையை முடித்துத் தர இன்னும் எத்தனை பேர்களை அதிகப்படியாக அமர்த்த வேண்டி இருக்கும்!

○ விடை: 225 பேர் ஏழு மாதங்களில் இருபத்தொரு மைல் சாலையை அமைத்தார்களானால் மீதமுள்ள இருபத்தொன்பது மைல்களை இதே மனிதர்கள் முடிக்கவேண்டுமானால் 9-2/3 மாதங்கள் ஆகும். ஐந்து மாதங்களில் முடிக்கவேண்டுமானால் 435 மனிதர்கள் தேவைப்படும். ஆகவே காண்ட்ராக்டர் இன்னும் அதிகமாக 210 பேர்களை நியமித்தாக வேண்டும்.

அறிமுகப்படுத்துகிறோம் ஆக்பா ஐஸோலி 1
முதன்முறையாக இந்திய அமெச்சூர் புகைப்படக் கலைஞர்களுக்கு



Agfa® ISOLY

1. மூன்று ஷட்டர் வேகப் பொருத்தங்களுடன் லீவரை இயக்குவது இலகு. 2. நுட்பத் தெளிவுடன் சோபிக்கும் படங்களுக்கான அக்ரோமாட் f8 லென்ஸ். பாதகமான சூழ் நிலைகளிலே எடுக்கப்படும் படங்களின் சரியான எக்ஸ்போஷருக்கு உறுதி தரும் 2 லென்ஸ் ஸ்டாப்கள். 4.120 சைஸ் ரோல் பிலிமிலே 16 (4x4 செமீ) படங்களைத் தருகிறது (6x6 செமீ சைஸ் உடையதை விட 4 அதிகம்). விசேஷ லாக்கிங் பொறி யமைப்பை உடைய பிலிம் சுருட்டுக் குமிழ். இரட்டை எக்ஸ்போஷரைத் தடுத்திடுகிறது. 5.'இரட்டை எக்ஸ்போஷர் லாக்' இயக்க நிலையில் இருப்பதை காட்டுகிறது சிவப்புநிற எச்சரிக்கை விளக்கு.

திரையிடலுக்கெனப் பளிச்சென்ற ஆக்பா கலர் டிரான்பேரென்ஸிகளையும் எடுக்கிறது ஆக்பா ஐஸோலி I. தெள்ளத் தெளிவுள்ள பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் எப்போதுமே குறிப்பிட்டுக் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

தயாரிப்பாளர்கள் : நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.

ஏகபோக விநியோகஸ்தர்கள் :
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்,
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை
• புகைப்படச் சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆண்ட்வெர்ப்/லீவர்குஸன் அவர்களின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

விலை: ரூ. 143/- எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. பிற வரிகள் தனி.

ஆக்பா ஐஸோலி I— ஆர்வத் துடிப்புள்ள அமெச்சூர்களுக்கான காமிரா.



தெரியுமா?

980. உலகின் முதல் கைக் கடிகாரத்தை உருவாக்கியவர் ஒரு ஜெர்மானியர், ஓர் அமெரிக்கர், ஒரு ஸ்விஸ்காரர் - இதில் எது சரி?

981. கற்பனைக் கதையைக் குறிக்கும் 'நாவல்' என்னும் பெயர் எப்படி வந்தது?

982. நீந்த அறியாத இரண்டு விலங்குகள் எவை ?

983. வரிக் குதிரையின் நிறம் என்ன ?

984. சிங்கம் கழுகு அடையாளங்களால் குறிக்கப்படும் நாடுகள் எவை?

985. யானையல்லாது தந்தம் கொடுக்கும் வேறு மிருகங்கள் எவை?

986. நாய்கள் நாக்கைப் பெரும்பாலும் வெளியே நீட்டிக் கொண்டிருப்பது எதனால் ?

987. காலண்டர் யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?

988. குட் பை (Good Bye) எந்தச் சொற்களின் திரிபு ?

989. வைரக் கல்லை எரிக்க முடியுமா ?

990. பதின்மூன்று என்ற எண் நன்மை இல்லாத எண்ணாகக் கருதப்படுவது ஏன்?

991. சப்தம் போடாத மிருகம் எது?

992. நியூஸ் (News) என்னும் சொல் எப்படி வந்தது ?

993. முதன் முதல் போப் என்னும் பட்டம் பெற்றவர் யார் ?

994. விட்டமின் என்னும் பெயரை முதலில் தொடங்கியவர் யார் ?

995. முதன் முதலில் உலகப் படம் வரைந்தவர் யார்?

996. மெஸ்மரிசம் என்னும் வித்தையைக் கண்டறிந்தவர் யார் ?

997. ஒற்றர் படையை ஐந்தாம் படை என்கின்றனர். அப்படியானால் மற்ற நான்கு படைகள் எவை ?

998. பெண்கள் வோட் செய்ய முடியாத நாடு எது ?

999. நோபல் பரிசுக்காகக் கிடைத்த 'செக்'கை, பல நாட்கள் வரையிலும் புத்தக அடையாளமாக வைத்திருந்தவர் யார் என்று தெரியுமா ?

1000. தமிழன் என்ற பெயரில் சாக விரும்பிய ஆங்கிலேயர் யார்?

(981 - 1000 தொகுத்தவர் :கி. பி. ராஜு)

1001. ஊற்றுப் பேனாவைக் கண்டு பிடித்தவர் யார் ?

1002. கிராமபோன் பெட்டியை யார் கண்டறிந்தார்?

1003. போட்டோத் தொழிலைக் கண்டு பிடித்தவர் யார் ?

1004. சண்டையில் பயன்படும் டாங்க் யாரால் கண்டு பிடிக்கப்பட்டது ?

1005. டெலிவிஷனைக் கண்டு பிடித்தது யார் ?

1006. தீப்பெட்டியை யார் கண்டு பிடித்தார் ?


(1001-1006 -தொகுப்பு -லென்ஸ்)

தெரியுமே!

விடைகள் : 980. பீடர் ஹென்லீன் என்ற ஜெர்மானியர் 1510-ல் உலகின் முதல் கைக்கடிகாரத்தைத் தயாரித்தார். 981. இத்தாலிய மொழியில் 'நாவல்' என்னும் சொல்லுக்கு கதை என்று பொருள். 982. ஒட்டகம், பன்றி. 983. வெள்ளையில் கறுப்பு. 984. இங்கிலாந்து, அமெரிக்கா. 985. நீர்யானை, வால்ரஸ், காட்டுப் பன்றி. 986. வியர்வை நாக்கு வழியே வெளிவருவதால். 987. 1582ல் 13ம் போப் கிரிகரி (Pope Gregory XIII) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. 988. God be with you. 989. முடியும். 1400 முதல் 1600° F சூடாக்கினால் வைரம் எரியும். 990. கிறிஸ்துவும் அவருடைய சீடர்களும் கடைசியாகச் சாப்பிடும்போது 13 பேர் இருந்தனர். 991. ஒட்டைச்சிவிங்கி. 992. North, East, West, South என்னும் நான்கு திசைகளிலிருந்தும் வரும் செய்தியைக் குறிப்பதால் அவற்றின் முதல் எழுத்துக்கள் சேர்ந்து NEWS என்று வழங்கலாயின. 993. லியோ தி கிரேட் (Leo the Great) 994. ஃபங்க் விட்டமின் (Funk Vitamin) என்பவர். 995. தாலமி. 996. மெஸ்மர் என்னும் ஆஸ்திரிய டாக்டர். 997. தரை, கடல், ஆகாயம் என்னும் மூன்றும் முப்படை எனப்படும். பிரசாரப் படை என்பது நான்காவது படை. 998. பிரான்ஸ். 999. ஆல்பர்ட் ஐன்ஸ்டைன். 1000. ரெவரெண்ட் ஜி. யூ. போப். 1001. வாட்டர்மென் அமெரிக்கர் 1884ம் ஆண்டு. 1002. பெர்லினர் அமெரிக்கர் 1887ல். 1003. லூயிஸ் டாகரே என்ற பிரெஞ்சுக்காரர் 1837ல். 1004. ஸ்வின்டன் இங்கிலாந்துக்காரர் 1914ல். 1005. பயர்ட் 1926ல். ஆங்கிலேயர். 1006. ஜான் வாக்கர் ஆங்கிலேயர் 1827ல்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்






ராகவும் வேகவும்
புதையல் தேடிய
இன்பப் படலம்
உடனே இருவருமே கடலுக்கு ஓடினரே படகிலேறவே
சிக்கிச் சிதறுண்டு திக்கற்ற தீவினிலே ஒதுங்கினரே!
பயணம் பலநாட்கள். புயலும் வீசியது.. பயங்கரம்
சுற்றி, சுற்றி அலைந்து ஒற்றைக் குடிசையைக் கண்டனர்
படுத்திருந்த ஒரு கிழவன் படத்தினை வாங்கிப் பார்த்தானும்.
சொக்கும் பழச் சுவைப் பொக்கிஷம் இதுதான் சுவைமிகு பாப்பின்ஸ்!
சொக்குமின்பம், சொட்டும் இனிமை, பலே ஜோர்
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
5 பழரசச் சுவை வகைகள்—
ராஸ்ப்பெர்ரி, அன்னாசி, எலுமிச்சை,
ஆரஞ்சு, சாத்துக்குடி.
ஒவ்வொரு சுருளிலும் 13
மிட்டாய் வில்லைகள்
PARLE
POPPINS